1-6-'56

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

1635/2-56 28
OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
28 JUN 1956

-2- அணா

செய்திகள்

குழந்தைகள் விடுதி

நேரு குடும்பத்தார் வசித்துவந்த அலகாபாத்திலுள்ள ஸ்... பவன், 1949-இலிருந்து அநாதைக் குழந்தைகள், அங்கஹீனம... இளஞ் சிறுவர்கள், பெற்றோரை இழந்த பாலர்கள் ஆகியோரு... பராமரிப்பு விடுதியாகப் பயன்பட்டு வருகிறது. பிரதமர் நேரு ... விஜயம் செய்யும் பொழுதெல்லாம் இந்தச் சிறுவர்களை நோக்கி, ''ந... எல்லோரும் வருவதற்குமுன் யார் இங்கே குடி இருந்தா... தெரியுமா?'' என்று கேட்பது வழக்கம். ''நீங்கள்தான்'' என்று ப... அளிப்பார்கள். ''ஆம், நீங்கள் எல்லாரும் என்னைப் போல ஆவதற... முயற்சி செய்யவேண்டும்'' என்று கூறுவார். இப்போது அங்கேயுள்... குழந்தைகளின் எண்ணிக்கை நூற்றி எண்பத்தேழு.

குழந்தைகள் விழா

சென்னை, மயிலாப்பூர், கஸ்தூரிபாய் சங்கத்தின் சார்பில் குழந்... கள் விழா சமீபத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் ஆசிரியர் தி... எஸ். டி. சுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர், இச்சங்கத்தா... தினமும் சுமார் நூறு குழந்தைகளுக்குப் பால் அளிப்பதைப் புகழ்ந்... கூறினர். குழந்தைகள் நாடகத்துடன் விழா இனிது முடிந்தது.

புத்த ஜயந்தி கொண்டாட்டம்

புத்தர் அவதார புருஷர். உலகில் பெரும்பாலோர் புத்தமதத்தை... சேர்ந்தவர்கள். சீனு, ஜப்பான், இந்தோனேசியா, பர்மா, தாய்லாந்து... இலங்கை முதலிய கீழ்த்திசை நாடுகளில் மிகப் பெரும்பாலோர் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர் தோன்றி மறைந்து 2500 ஆண்டுகள் ஆகின்றன. இந்த ஜயந்தியை முன்னிட்டு, புத்தர் தோன்றிய நம் பாரதத்துக்குப் பல நாடுகளிலிருந்தும் புத்த பிக்ஷுக்களும் யாத்திரிகர்களும் வந்திருந்தார்கள். அவர் அவதரித்த லும்பினி வனத்திலும், ஞானம் அடைந்த புத்த கயாவிலும், அவர் முக்தியடைந்த குஸிநகரிலும், முதல் முதலாகத் தம் நீதி போதனைகளை உபதேசிக்கத் தொடங்கிய சாரநாத்திலும் ஏராளமானவர்கள் கூடி இந்த ஜயந்தியைக் கொண்டாடினார்கள். டில்லியில் இந்த ஜயந்தியை முன்னிட்டு ஒரு ஞாபகார்த்தச் சின்னம் கட்ட எண்ணியிருக்கிறார்கள். அதற்கு நேரு அஸ்திவாரக்கல் நாட்டினர்.

தாயின் தியாக புத்தி

அரண்மனையில் வேலை செய்துவந்த தாதி ஒருத்தி தன்னைக் காப்பாற்றிவரும் அந்த அரச வம்சத்தாரிடையே மாறாத அன்பு வைக்கிறாள். இளவரசனுக்கு ஓர் ஆபத்து வருகிறது. அவனைக் காப்பாற்றத் துடிதுடிக்கிறாள். தான் பெற்ற குழந்தையைப் பலியாக்கி அவனை உயிர் தப்புவிக்கிறாள். அவள்தான் பன்னு. இந்தச் சரித்திரக் கதையை நாடகமாக அமைத்துள்ளார் ஸ்ரீ ஏ. எஸ். பி. ஐயர் அவர்கள். தாயின் தியாகபுத்தி என்ற தலைப்புடன் எளிய நடையில் படித்துச் சுவைக்கும்படி வெகு நன்றாக எழுதியுள்ளார். விலை ரூ. 1-4-0. வெளியிட்டவர்கள்: அல்லயன்ஸ் கம்பெனி. மயிலாப்பூர், சென்னை-4.

குழந்தைக்கு

கோசுதா என்ற குழந்தைக் கவிஞர் உங்களுக்கான பல கவிதைகளை இயற்றியுள்ளார். அவற்றில் சில கவிதைகள் 'குழந்தைக்கு' என்ற தலைப்பில் புத்தகமாக வந்துள்ளது. கவிதைகள் எல்லாம் எளிய நடையில் கருத்து நிறைந்து அமைந்துள்ளது. வேண்டுபவர்கள் வள்ளுவர் பண்ணை, 140, மேட்டுத் தெரு, கொழும்பு என்ற விலாசத்துக்கு எழுதலாம்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 11

1 - 6 - '56

குழந்தைகளே!	பக்கம் 2
திருடனின் பக்தி	.. 3
மாடு பெற்ற புலவர்	.. 5
உங்களால் முடியுமா?	.. 8
சாதந்தன்	.. 9
சரியான தண்டனை	.. 13
மூளைக்கு வேலை	.. 18
பிசாசுப் பெண்	.. 19
தந்திரம் பலித்தது	.. 25
ஈரச்சுவர்	.. 27
உயிரோவியம்	.. 29
புலிக்குட்டி	.. 34
தந்தை பாவே வருகிறார்	37

அட்டைப் படம்-
(போட்டோ) N. ராமகிருஷ்ணா
செய்திகள் - 2 - அட்டை.
கிளைக் கழகம் 3 அட்டை.

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-
கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

புதிய
தொடர்கதை

ஐ11802

ஆர்வி
எழுதும்

சைனா சு-சூ!

கண்ணன்

15-6-56

இதழில்

ஆரம்பமாகிறது

குழந்தைகளே!

கண்ணன் சித்திரப் போட்டிக்குப் படங்கள் வந்து குவிந்த வண்ணமாக இருக்கின்றன. எத்தனை பேருக்குச் சித்திரம் வரைவதில் இருக்கும் ஆர்வத்தைப் பார்க்கும்போது பிரமிப்பாக இருக்கிறது. இந்த உற்சாகத்துக்குத் தூண்டுகோலாக இந்தப் போட்டி அமைந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் சிலர் தங்கள் பாடப்புத்தகத்திலுள்ள படங்களை நகல் எடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஏதோ படம் போடவேண்டுமே என்பதற்காக இப்படிச் செய்யக்கூடாது. சொந்தமாகக் கற்பனை செய்து போடவேண்டும். மற்றும் சிலர் வெறும் பென்சிலால் போட்டு, படமே கண்ணுக்குத் தெரியாதபடி அனுப்பியிருக்கிறார்கள். அப்படிச் செய்யாமல் படம் எழுதும் கறுப்பு மையினால் வரைந்து அனுப்புங்கள். ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்பிவிடுங்கள்.

அடுத்த இதழில் புதிய தொடர்கதை ஒன்று ஆரம்பமாகிறது. கதையின் ஆரம்பத்திலிருந்தே படிக்கவேண்டும் என்றால் முன்னாலேயே உங்கள் ஊர் ஏஜெண்டிடம் சொல்லிவைத்து, உங்கள் பெயரையும் அவர்களிடம் பதிவு செய்துகொண்டுவிடுங்கள். அப்புறம் நடுவில் கிடைக்கவில்லை என்று எழுதாதீர்கள். 'சைனா சு-சூ' என்ற புதிய தொடர்கதை உங்கள் கருத்தைக் கவரக்கூடிய ஆச்சரியம் நிறைந்த கதை; அதிசயமான கதை. தலைப்பைப் போலவே புதுமையான கதை.

மே மாதம் நாடெங்கிலும் புத்த ஜயந்தி கொண்டாட்டங்கள் நடைபெற்றன. புத்தரைப் போன்ற ஒரு பெரிய மகான் எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் அவதரித்ததில்லை. அவரைப் பற்றின சரியான கதை குழந்தைகள் படிக்கக்கூடிய முறையில் இதுவரை வெளிவரவில்லை. 'ஆசியாவின் ஜோதி' என்று உலகமே கொண்டாடும் பகவான் புத்தருடைய கதை தயாராகிவருகிறது. விரைவில் கண்ணன் வெளியீடாக அது வரும். மற்றும் இந்தியத் தவப் புதல்வர்களான பல பெரியார்களுடைய நூல்களும் வெளிவர இருக்கின்றன. படிக்கப் படிக்கச் சுவையும், அறிவும் தரக்கூடிய பல புத்தகங்களை வெளியிட எண்ணியிருக்கிறோம். நீங்களும் வாங்கிப் படிக்கத் தயாராக இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். 'உன் நண்பர்களைக் கொண்டு உன் குணத்தை அறியலாம்' என்பார்கள்; இப்போது நீ விரும்பிப் படிக்கும் புத்தகங்களைக் கொண்டு நீ எப்படி இருக்கப் போகிறாய் என்பதைச் சொல்லிவிடலாம் என்று தோன்றுகிறது. உங்கள் செலவுகளில் புத்தகம் வாங்கிப் படிப்பதற்கென்று நாலில் ஒரு பகுதியை நீங்கள் சேர்த்து வைத்தால் கூடப் போதும். நல்ல நல்ல அருமையான புத்தகங்களை வாங்கிப்; படிக்கலாம்; சேர்த்து வைத்துப் பயனும் பெறலாம். உன்னுடைய சொந்த வாசகசாலை உயர்ந்த வாசகசாலையாக, அறிவுக் கோயிலாக விளங்கும் என்பதில் என்ன சந்தேகம்?

ஜூலை முதல் கண்ணனில் முற்றிலும் புதிய அம்சங்கள் பலவற்றைச் சேர்க்கப் போகிறோம். புரொபஸர் விஞ்ஞானம் அவர்களின் விஞ்ஞான விந்தைகளைச் சித்திரக் கதைகளாக மீண்டும் வெளியிட எண்ணியிருக்கிறோம் இன்னும் கவிதைகள், நாடகங்கள், கதைகள் எல்லாமே புது மாதிரியாக இருக்கப் போகின்றன.

புதிய யந்திர வசதிகள் வந்துவிட்டதால் கண்ணன் இனி உரிய காலத்துக்கு முன்னதாகவே உங்களுக்குக் கிடைக்கும் என்று கூற விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் உங்கள் அன்பும் ஆதரவும் கண்ணனுக்குப் பூர்ணமாக உண்டு என்பது எனக்குத் தெரியும்.

ஆசிரியர்

திருடனின் பக்தி

சசிதேவன்

பக்காத் திருடன் செங்கோடன்
பயங்கரமான ஒரு மனிதன்.
கொடுமைகள் எல்லாம் ஓர் உருவம்
கொண்டால் அதுவே செங்கோடன்.
ஊரைக் கொள்ளை அடிப்பதுதான்
ஒவ்வொரு நாளும் அவன்வேலை.
இடமும் தரமும் பாராமல்
எங்கும் கொள்ளை அடித்திடுவான்.
இரக்கம், கருணை காட்டாமல்
எந்தக் கொலையும் செய்திடுவான்.
'உயர்குணம் ஏதும் இவனிடத்தில்
உண்டோ?' என்றால், ஒன்றுண்டு—
திருடச் செல்லும் போதெல்லாம்
தெய்வம் தொழுதே சென்றிடுவான்.
கன்னக் கோலைத் தொடுமுன்பு
கடவுள் பாதம் பணிந்திடுவான்.
''போலீஸ் கையில் சிக்காமல்
போய்வர நீயும் அருள்செய்வாய்!''
என்றே ஈசனை வணங்கிடுவான்.
இதயம் உருகத் துதித்திடுவான்.

2

இப்படியாகப் பல நாளாய்
ஏதும் ஆபத் தில்லாமல்
திருட்டுத் தொழிலைத் திறமையுடன்
செய்து வந்தான் செங்கோடன்.
ஆனால்—
ஒருநாள் இரவில், நடுநிசியில்
'ஓட்டல்' ஒன்றில் திருடுகையில்
எங்கிருந்தோ சில போலிஸார்
எப்படியோ அவ் வேளையிலே
வந்தனர்; ஐயோ, ஒரு நொடியில்
மாட்டிக் கொண்டான் செங்கோடன்!

3

மாட்டிக் கொண்ட செங்கோடன்
மனசில் இவ்விதம் எண்ணிட்டான்:
''ஒவ்வொரு நாளும் ஈசனை நான்
உள்ளன் புடனே கும்பிட்டேன்.
பண்ணிய பூசைகள் எத்தனையோ!
படைத்த படைப்புகள் எவ்வளவோ!
எண்ணி இதனைப் பாராமல்
இரக்கம் இல்லா அவ்விறைவன்
என்னைச் சிறையில் மாட்டிவிட்டான்;
என்செய் வேன்நான் இனிமேலே!''

4

இப்படி அந்தச் செங்கோடன்
எண்ணிய எண்ணம் சரிதானே?
சற்றே இதைநாம் சிந்தித்தால்
சடுதியிலே விடை கண்டிடலாம்.
கருணையின் இருப்பிடம் ஆனவனாய்க்
கவலைகள் யாவும் ஒழிப்பவனாய்
இருக்கும் இறைவனை எவரேனும்
இரக்கம் அற்றவர் எனலாமோ?
அன்பே தெய்வம் ஆகுமென
அறிஞர் உரைத்தது பொய்யாமோ?
அன்பே உருவம் ஆனவனை
அன்பால் அன்றோ தொழவேண்டும்?
கொலைகள் ஆயிரம் செய்துவிட்டு,
கொள்ளைகள் ஆயிரம் நடத்திவிட்டு,
ஈசன் பாதம் பணிவதனால்
ஏதேனும் பலன் கிட்டிடுமோ?
பூசைகள் ஆயிரம் செய்வதனால்
புண்ணியம் எதுவும் கிடைத்திடுமோ?
அன்பு செய்து வாழ்பவரே
ஆண்டவன் துணையைப் பெற்றிடுவர்;
துன்பம் செய்வோர் அடைவதெல்லாம்
துயரம் அன்றி வேறில்லை!

மாடு பெற்ற புலவர்

கி. வா. ஜகந்நாதன்

சோழநாட்டில் உறையூரில் கிள்ளிவளவன் என்ற சோழ அரசன் செங்கோல் ஓச்சி வந்தான். அவனுக்குத் தமிழ்ப் புலவரிடம் மிக்க அன்பு. எந்தக் காரியம் இருந்தாலும் அதை விட்டுவிட்டுத் தமிழ்ப் புலவர்களுக்கு உபசாரம் செய்வான். அவனைச் சார்ந்தவர்களும் அரண்மனைக்கு எந்தத் தமிழ்ப் புலவர் வந்தாலும் வரவேற்று உபசரித்து அரசனிடம் அழைத்துச் செல்வார்கள்.

ஐயூர் என்பது சிறிய ஊர். அங்கே ஒரு புலவர் இருந்தார். அவர் பெரிய புலவர்; பெருங் கவிஞர். அவர் காலில்லா முடவர். அவர் தம் விருப்பப்படி பல இடங்களுக்குச் செல்ல முடியாவிட்டாலும் அவருடைய பாட்டு, பல ஊர்களுக்குச் சென்று பரவியது. அவற்றைக் கண்ட மக்கள் அவற்றில் உள்ள சுவையை உணர்ந்து புலவரைப் பாராட்டினார்கள். ஐயூர்ப் புலவர் என்றே யாவரும் அவரை அழைத்தார்கள். அவருக்குப் பெற்றோர் வைத்த பெயரை யாரும் சொல்வதில்லை. அவ்வளவு மரியாதை அவரிடம். கடைசியில் அவருடைய சொந்தப் பெயரே மறைந்து போயிற்று. ஐயூர் கிழார் அல்லது ஐயூர் முடவனார் என்றே அவரை எல்லோரும் குறிப்பிட்டுப் பேசினார்கள். கால் முடம் என்பதனால் அவருக்கு எந்த விதமான குறைபாடும் இருக்கவில்லை. அவராகச் செய்துகொண்டதல்லவே அது? குணத்தில் குறைபாடு இருந்தால் இழிவாக நினைப்பார்கள். அங்கக் குறைவினால் ஒருவரை இழிவாகச் சொல்வது அக்காலத்து மக்களுக்கு வழக்கம் இல்லை. ஐயூர் முடவனார் என்று வழங்கும்போது மரியாதையோடே சொன்னார்கள்.

புலவருக்கு வெளியூர்களுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. எவ்வளவுதான் சிறந்த புலவராக இருந்தாலும் பெரிய அரசர்களின் சபைகளுக்குச் சென்று மற்றப் புலவர்களோடு சேர்ந்துகொண்டு தம்முடைய புலமையைக் காட்டினால்தான் பெருமை வளரும்; அவருக்கும் திருப்தி உண்டாகும்.

சிறிய ஊரில் அடைந்துகொண்டு இருப்பதை அந்தப் புலவர் விரும்பவில்லை. அவரை யாரேனும் புலவர்கள் வந்து பார்த்துப் போவார்கள். தமிழ் நாட்டில் இன்ன இன்ன மன்னர் இப்படி இப்படி இருக்கிறார் என்ற செய்தி அவர்கள் மூலமாக அவருக்குத் தெரியவந்தது. உறையூரில் இருந்த கிள்ளிவளவனுடைய பெருமையை அவர் அறிந்துகொண்டார்.

பொன்னும் பொருளும் குவித்துக்கொண்டு வாழ வேண்டும் என்று அவர் விரும்பவில்லை. ஆயினும் இன்றியமையாத பொருள்களுக்குக் குறைவு இல்லாமல் வாழ வேண்டும் என்பது அவர் ஆசை. வெளியூர்களுக்குச் சென்று நாலு செல்வர்களைப் பார்த்துத் தம் புலமையைப் புலப்படுத்தினால் தானே பரிசு கிடைக்கும்? பரிசு மட்டுமா? புகழும் உண்டாகும் அல்லவா? தமிழ் நாட்டில் சேர சோழ பாண்டியர்கள் தமிழ்ப் புலவர்களைப் பாதுகாத்துப் புகழ் பெற்றார்கள். அங்கங்கே சிற்றரசர்கள் பலர் இருந்தார்கள். செல்வர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் எல்லாரையும் போய்ப் பார்ப்பது உடல் வலிமையுடைய புலவர்களுக்கே அரிய காரியம். முடவராகிய புலவர் எப்படிப் பலரிடம் போய்வர முடியும்?

போகாமல் இருப்பதனாலும் அவர் வறுமை நிலை மாறாது. சோழனிடம் சென்று அவனைப் பாடினால் அவன் பரிசளிப்பான். அதை வைத்துக்கொண்டு வாழலாம். மற்றவர்களிடம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

சோழமன்னன் உறையூரில் இருக்கிறான். அங்கே போக அவரால் முடியுமா? வண்டி ஏறிப் போனால் போகலாம். வண்டி ஒன்றை அமைத்துக்கொண்டால் அவருக்கு எவ்வளவோ சௌகரியமாக இருக்கும்.

அவருடைய விருப்பத்தை அறிந்து உள்ளூர்ச் செல்வர்களும் வேறு சிலரும் அவருக்கு ஓர் அழகிய வண்டியைப் பண்ணித் தந்தார்கள். வண்டியிற் பூட்ட மாடு வேண்டுமே! அதையும் அவர்களிடமே கேட்கப் புலவர் விரும்பவில்லை. வேறு யாரிடமேனும் சொல்லி வண்டிமாடு வாங்கலாம் என்று எண்ணினார்.

அக்காலத்தில் அவர் ஊருக்கு அருகில் தோன்றி என்னும் மலைக்கு அருகில் தாமான் என்ற சிற்றரசன் ஒருவன் இருந்தான். தோன்றி மலைக்குச் சொந்தக்காரன் ஆகையால் அவனைத் தோன்றிக்கோன் என்று மக்கள் வழங்கினார்கள். அவனை அணுகித் தமக்கு ஒரு நல்ல காளை மாட்டைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கலாம் என்று புலவர் நினைத்தார். வேறு ஒருவருடைய வண்டியில் ஏறிக்கொண்டு தாமானிடம் போனார்.

அவன் புலவரை வரவேற்று உபசரித்தான்.

"உங்களைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேன். நேரே பார்த்ததில்லை. உடம்பு மிகவும் இளைப்பாக இருக்கிறதே!" என்றான்.

"நாள் தோறும் உணவு உண்டால் உடம்பு நன்றாக இருக்கும்" என்றார் புலவர்.

"உணவு உண்ண முடியாதபடி வயிற்றில் ஏதாவது நோய் உண்டோ?" என்று கேட்டான் தோன்றிக்கோன்.

"வயிற்றில் பசி என்ற நோய் இருக்கிறது. அதற்கு மருந்து தினமும் கிடைப்பதில்லை. ஒரு வேளை உணவு கிடைத்தால் அடுத்த வேளை கிடைப்பதில்லை; பட்டினிதான். இந்த வறுமை நிலையில் உடம்பு இளைப்பது வியப்பல்லவே?"

இதைக் கேட்டுத் தாமான் உள்ளம் உருகியது. அவருக்கு உடனே நல்விருந்தளித்து இளைப்பாறச் சொன்னான். புலவர் தாம் வந்த காரியத்தைச் சொல்லத் தொடங்கினார். "என் வறுமையைப் போக்க வழி என்ன என்று யோசித்தேன். கிள்ளிவளவன் புலவர்களுக்கு வாரி வாரி வழங்குவதாகக் கேள்வியுற்றேன். அவனை அடைந்து என் வறுமையையும் புலமையையும் புலப்படுத்தினால்

வறுமை ஒழியும், புலமை வளரும் என்று நினைக்கிறேன். என்னிடம் ஒரு வண்டி இருக்கிறது. அதில் பூட்ட எருது இல்லை. நீ ஒரு காளை மாட்டை வழங்கினால் வண்டியேறி உறையூருக்குச் செல்வது எளிதாக இருக்கும். வேறு பொருளைக் கேட்டு உனக்குத் தொல்லை கொடுக்க விரும்பவில்லை'' என்றார்.

தாமான் அதைக் கேட்டான். முன்பே அவர் நிலையை அறிந்திருந்தால் உபகாரம் செய்திருக்கலாமே என்று எண்ணி இரங்கினான்.

''இப்போதே உறையூருக்குப் போக வேண்டுமா? இன்னும் சில நாட்கள் இங்கே தங்கிச் செல்லலாமே!'' என்றான். புலவர் அவன் விருப்பப்படியே தங்கினார். தாமான் அவருடைய கவிகளைக் கேட்டு இன்புற்றான்.

ஒரு நாள் புலவர் விடை கேட்டார். ''உங்களுக்கு வேண்டியது விடைதானே?'' என்று சொல்லி எருதைக் கொண்டுவந்து நிறுத்தினான். விடை என்பதற்குக் காளை மாடு என்றும் ஒரு பொருள் உண்டு. ''இது போதுமா?'' என்று கேட்டான். ''போதும்'' என்றார் புலவர்.

''இதை நீங்கள் வாங்கிக் கொண்டு போவதானால் ஒரு காரியம் செய்ய வேண்டும்.''

''என்ன?'' என்றார் புலவர்.

''பசு மாடுகளும் தருகிறேன். அவற்றையும் அழைத்துச் செல்ல வேண்டும். அதோ பாருங்கள், அந்த மந்தையை உங்களுக்கு வழங்கிவிட்டேன்'' என்று தாமான் தோன்றிக்கோன் சொன்னதைக் கேட்ட புலவர் பிரமித்துப் போய்விட்டார்.

''என்ன! இவ்வளவுமா எனக்கு?'' என்று கேட்டார்.

''உங்கள் புலமைக்கு இன்னும் கொடுக்கலாம். என் நிலைமைக்கு இவ்வளவுதான் முடிந்தது'' என்று அந்த வள்ளல் பணிவோடு சொன்னான்.

ஐயூர் முடவனார் வாயடைத்துப் போனார். அவர் கேட்டது என்ன? அவன் கொடுப்பது என்ன?

அந்தக் காலத்தில் பசுக்களையே செல்வமாக எண்ணியிருந்தார்கள். பெரிய செல்வர்கள் பல பசுக்களை வைத்திருந்தார்கள். புலவர் இப்போது கோதனம் பெற்றார். அவற்றைக் கொண்டு சென்றார். அவ்வளவையும் அவர் என்ன செய்வார்? அவற்றைப் பிறருக்கு விற்று உணவுப் பொருள்களை வாங்கினார்.

பல மாதங்கள் குறைவின்றி வாழ அப்பண்டங்கள் உதவின. இடையில் ஒரு நாள் தாமான் அளித்த மாட்டை வண்டியிற் பூட்டி அதில் ஏறி உறையூரை அடைந்தார். கிள்ளிவளவனைக் கண்டு அளவளாவினார்.

"இவ்வளவு காலமாக நீங்கள் இங்கே வரவில்லையே!" என்று சோழன் கேட்டான்.

"அதற்கு ஒரு தாமான் தயை வேண்டியிருந்தது" என்று சொல்லி அவனைப்பற்றிச் சொன்னார். ஆயிரம் யானை தந்தாலும் அந்த முடவருக்கு ஒரு காளை மாட்டால் உண்டான நன்மை கிடைக்குமா? இதை உணர்ந்த சோழ மன்னனும் தாமானைப் பாராட்டினான்.

அன்று முதல் ஐயூர் முடவனார் கிள்ளிவளவனுடைய அன்பையும் கொடையையும் பெற்றுச் சிறந்து விளங்கலானார்.

உங்களால் முடியுமா?

1. இரண்டு நாய்கள் சோர்ந்து காணப்படுகின்றன. சில கோடுகளைச் சேர்ப்பதன் மூலம் இந்த இரண்டு நாய்களையும் நாலுகால் பாய்ச்சலில் ஓடுவது போலச் செய்யலாம்.



2. 17 குச்சிகளைக் கொண்டு இரண்டு வரிசைகளில் 6 சதுரங்கள் இருக்கின்றன. இதிலிருந்து 5 குச்சிகளை எடுத்துவிட வேண்டும். ஆனால் அவ்விதம் எடுத்தால் மீதி மூன்று சதுரங்கள் இருக்க வேண்டும்.



3. படம் (ஆ)ல் காட்டியபடி 3 அட்டைத் துண்டுகளையும்; படம் (அ), படம் (இ)ல் காட்டியபடி ஒவ்வோர் அட்டைத் துண்டையும் எடுத்துக்கொண்டு ஒரு சிலுவையை அமைக்கவேண்டும்.

(விடை 33-ஆம் பக்கம் பார்க்க)

பி. ஜி. ராவ். கும்பகோணம்.

சாதந்தன்

ஆர். என். ராஜன்

புத்தர்பிரான் போதி விருக்ஷத்தின் அடியில் அமர்ந்து ஞான ஒளியைப் பெற்ருர். அப்போது அவர் முன் பிறப்புக்களின் விஷயங்களேயும் கண்டறிந்தார். ஒரு பிறப்பில் அவர் தூய வெள்ளே நிறம் கொண்ட யானேயாகப் பிறந்தார். அந்த வெள்ளே யானேக்குச் சாதந்தன் என்று பெயர்.

அந்தக் காட்டில் வசித்து வந்த யானேகளுக்கெல்லாம் தலேவனுக விளங்கினுன் சாதந்தன். அந்தக் காட்டைச் சுற்றிலும் வானே அளாவும் ஏழு உயர்ந்த மலேகள் கம்பீரமாகக் காட்சி அளித்தன. அந்த மலேகளுக்கிடையே பரந்த அழகான நீர்ப் பரப்பும் இருந்தது.

சாதந்தனுக்கு நேர்த்தியான ஆறு தந்தங்கள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் தாமரைத் தண்டைப் போல் பார்வைக்கு மொழுமொழுவென்று இருந்தது. விளக்கொளியில் பலவித வர்ணங்களே அள்ளி வீசும் ரத்தினத்தைப் போல் தந்தங்கள் ஆறும் சூரிய கிரணத்திலுள்ள ஆறு வர்ணங்களாக ஜொலித்துக்கொண்டிருந்தன.

சாதந்தனுக்கு இரண்டு மனேவியர் இருந்தார்கள். ஒருத்தியின் பெயர் சுல்லா-சுபந்தா. மற்ருெருத்தி மகா சுபந்தா. ஒரு நாள் மூவரும் ஒரு மரத்தடியில் இருக்கும் சமயம் சாதந்தன் தன் துதிக்கையால் கிளே ஒன்றைப் பற்றிக் குலுக்கினுன். அப்போது மலர்கள் எல்லாம் மகா சுபந்தாவின்மீது விழுந்தன. சுல்லாசுபந்தாவின்மீது முட்களும் கட்டெறும்புகளும்தான் விழுந்தன. இதைக் கவனித்ததும் சுல்லாசுபந்தாவின் முகம்

சுருங்கியது. தனக்குள்ளேயே, 'என் கணவர் என்னைவிட மகாசுபந்தாவைத்தான் அதிகம் விரும்புகிறார். என்னைக் கண்டால் பிடிக்கக்கூட இல்லை. இல்லாவிட்டால் என்மீது முட்களையும் அவள்மீது மலர்களையும் உதிர்ப்பாரா?' என்று எண்ணி வருந்தினாள்.

மற்றொரு நாள் யானைக் குட்டி ஒன்று குளத்திலிருந்து தாமரைப் பூ ஒன்றைக் கொண்டுவந்து தலைவனிடம் கொடுத்தது. அவன் அதைப் பரிவுடன் வாங்கி மகாசுபந்தாவை அருகே அழைத்து அவளிடம் கொடுத்தான். பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்த சுல்லாசுபந்தாவைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. இதைக் கண்டதும் சுல்லா-சுபந்தாவுக்குக் கடுங்கோபம் வந்தது. தன் கணவன்மீதே பொறாமை கொண்டாள். இதற்குத் தக்கபடி பழிக்குப் பழி வாங்குவதென்றும் தீர்மானம் செய்துவிட்டாள்.

அவள் கடவுளைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தாள். கடவுள் எதிரே தோன்றி, "என்ன அம்மா, வேண்டும்?" என்று கேட்டார். "நான் இந்த உடலைவிட்டு நீங்கி மறுபிறப்பில் ஒரு ராஜகுமாரியாகப் பிறக்க வேண்டும்" என்று வேண்டினாள்.

அதன்படியே அவள் மதராஜனின் பெண்ணாகப் பிறந்தாள். வயது ஆனதும் பார்ப்பவர் பிரமிக்கும்படி அழகான ராஜகுமாரியாகத் திகழ்ந்தாள். அவள் அழகைக் கண்டு மயங்கி, காசி ராஜன் அவளை மணந்துகொண்டான். அவள்



எதை விரும்பினுலும் அதை நிறைவேற்றி வைப்பதாகவும் உறுதி கூறினுன்.

அவள் சாதந்தனைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் மறக்கவேயில்லை. அந்த நாட்டிலுள்ள வேடர்களை எல்லாம் அழைத்து வரச்சொன்னுள். எல்லாரும் வந்தார்கள். அவர்களில் சோனுத்தரன் என்பவன் மட்டும் எல்லாரையும்விட மிகுந்த பலசாலியாகவும் பார்ப்பதற்குப் பயங்கரமாகவும் இருந்தான்.

அவள் அவனை அழைத்து, ''சோனுத்தரா, இந்த ஏழு மலைகளையும் கடந்து செல். அப்பால் ஒரு பெரிய ஏரி இருக்கும். அதன் அருகே ஆறு தந்தங்களை உடைய வெள்ளை யானை ஒன்று இருக்கிறது. அதைக் கண்டுபிடித்து அதனுடைய தந்தங்களை இங்கே கொண்டு வர வேண்டும். நீ வெற்றியுடன் திரும்பினுல் விலை மதிப்பற்றஉயர்ந்த பரிசு ஒன்றை அளிப்பேன். இல்லையோ உனக்கு மரணம்தான் வெகுமதி!'' என்ருள்.



சோனுத்தரனும் வெற்றியுடன் திரும்பி வருவதாகக் கூறி, துணைக்குப் பல வேடர்களையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான். மலைகள் ஏற ஏற உயர்ந்து கொண்டே போயின. வழியும் நீண்டு கொண்டே போயிற்று. ஒவ்வொருவராக வழியிலேயே இறந்து

போனார்கள். கடைசியில் சோனுத்தரன் ஒருவன் தான் மிஞ்சினான். அவன் ஊக்கம் தளராமலும் தைரியத்தை இழக்காமலும் பிரயாணத்தைத் தொடர்ந்து சென்றான்.

சரியாகக் கிளப்பி ஏழு வருஷங்கள் ஏழு மாதங்கள் ஏழு நாட்கள் சென்று அந்த ஏரியை அடைந்தான். ஆறு தந்தங்களைக் கொண்ட அந்த யானைத் தலைவன் சாதந்தனைக் கண்டு பிடித்தான். உடனே ஓர் உயர்ந்த முனிவர்போல் வேஷம் போட்டுக்கொண்டு சாதந்தனை அணுகினான் சோனுத்தரன். அருகில் நெருங்கி வந்ததும் 'சட்' டென்று விஷத்தில் நனைத்துத் தயாராக வைத்திருந்த அந்த அம்புகளை எடுத்து எய்தான். அந்தக் கூட்டத்திலிருந்த மற்ற யானைகள் இதைப் பார்த்ததும், மிக பயங்கரமாகக் கர்ஜித்துக் கொண்டு சோனுத்தரனைக் கொல்ல வந்தன. ஆனால் சாதந்தன் அவனுக்குத் தீங்கு விளைவிக்காமல் எல்லா யானைகளையும் தடுத்து நிறுத்தினான். சோனுத்தரனைப் பார்த்து, தன்னைக் கொல்ல வந்த காரணம் என்னவென்று கேட்டான். அவன் எல்லாக் கதைகளையும் சொல்லி, ''அரசி உன்னைக் கொன்று ஆறு தந்தங்களையும் கொண்டுவரச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறாள்'' என்று சொன்னான்.

சோனுத்தரன் சொன்னதைக் கேட்டதும் சாதந்தன், அந்த அரசி தன் மனைவி சுல்லா-சுபந்தாவைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது, என்பதைத் தெரிந்துகொண்டான். அவள் ஆறு தந்தங்களைக் கொண்டுவரச் சொன்ன காரணத்தையும் அறிந்து கொண்டான். ''சரி, அவள் உத்தரவுப்படியே என்னுடைய தந்தங்களை வெட்டி எடுத்துச் செல்'' என்று சொல்லி, தயாராக நின்றான்.

சோனுத்தரன் என்ன பாடு பட்டும் அந்தத் தந்தங்களை அசைக்க முடியாமல் களைத்துப் போய், பெருமூச்சு விட்டபடி நின்றான். இதைக் கண்ட சாதந்தன் தானாகவே தன் துதிக்கையால் மரக்கிளையை முறிப்பதுபோல் தந்தங்கள் ஒவ்வொன்றையும் மிகுந்த வேதனையுடன் பிடுங்கிக் கொடுத்தான். வாய்ப்பக்கத்திலிருந்து ரத்தம் பீரிட்டுக் கொண்டு வந்தது. கடைசியில் ஆறாவது தந்தத்தைப் பிடுங்கிக் கொடுத்ததும் வேதனை பொறுக்க முடியாமல் விழுந்து இறந்தான்.

சோனுத்தரன் ஆறு தந்தங்களுடன் காசிமா நகரை அடைந்து அரசியிடம் நடந்த விஷயங்களைச் சொன்னான். அரசி இதைக் கேட்டதும் வருத்தத்தில் மூழ்கிப் போனாள். சாதந்தனுடன் அவள் சுகமாக வாழ்ந்த நாட்களை எண்ணிப் பார்த்தாள். மனமுடைந்து போய் மயக்கமுற்றுக் கீழே விழுந்து அவளும் உயிர் துறந்தாள்.

சோம்பலால் நன்மை தடைப்படும்; தீமை பெருகும்.

—புத்தர்.

சரியான தண்டனை

சி. ஞானமணி

அந்தச் சாலை நீண்டு கிடந்தது. இரு மருங்கிலும் பெரிய பெரிய மரங்கள் வரிசையாக நின்றிருந்தன.

அந்த வழியே தனியே வந்து கொண்டிருந்தார் மணியாத்தூர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் மகாதேவன். அவர் அணிந்திருந்த வெண்ணிறத் தலைப் பாகையும், கையில் தொங்கிய வெண்ணிறப் பையுமே அவரைக் காட்டிக் கொடுத்தன.

'டியூஷனில் இன்று அதிக நேரம் பிடித்துவிட்டதோ! இருட்டிக்கூட விட்டதே!' என்று எண்ணியவாறே வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார். திடீரென்று அவர்மீது ஒரு கல் வந்து விழுந்தது. திரும்பிப் பார்த்தார். 'சட சட'வென தடியடிகள் அவர்மீது விழுந்தன. யார் தம்மை அடிக்கிறார்கள் என்பதைக்கூட கவனிக்க முடியவில்லை. 'ஐயோ!' என்று அலறியபடியே கீழே விழுந்தார். ''வாங்கடா போகலாம்'' என்ற குரலுடன் மற்றவர்கள் உடனே ஓடி மறைந்துவிட்டார்கள்.

ஆசிரியர் மெல்லப் புரண்டார். வேதனையுடன் கையை ஊன்றி எழுந்திருக்க முயன்றார்; முடியவில்லை.

தூரத்திலிருந்து ஓர் ஆள் ஓடி வந்தான். அவன் உடலெல்லாம் பதறியது. அவர் முகத்தில் வழிந்த ரத்தத்தைத் தன் மேல் துணியால் துடைத்தான்.

''யாரது?'' என்று கிணற்றுக் குள்ளிலிருந்து கேட்பது போல் மெல்லிய குரலில் கேட்டார் அவர்.

''சார், நான்தான் சார், குன்னனூர் மாடிவீட்டு வேலைக்காரன், சங்கரன். சார், உங்களை அடிக்கத் தூண்டியது ராமலிங்கம் தான் சார். அவன்தான் உங்களை ஆள் வைத்து அடிக்கச் சொல்லியிருந்தான். நீங்கள் பரீட்சையில் அவனைப் பெயிலாக்கிட்டீங்களாம். இதை நான் தெரிந்துகொண்டு, உங்களுக்கு முன்னாலேயே எச்சரிக்கவே ஓடிவந்தேன். அதற்குள் அந்தப் பாவிகள் அடித்துவிட்டுப் போய்விட்டார்கள்'' என்று வருந்தினான்.

''ராமலிங்கமா?''

''ஆமாம், சார்.''

ஆசிரியர் முகத்தில் வேதனைப் புன்னகை தோன்றியது. ''சரி; ராமலிங்கம்தான் செய்தான் என்று யாரிடமும் சொல்லாதே!'' என்றார்.

சங்கரன் அவரைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு ஆசிரியரை வீட்டில் சேர்த்தான்.

ஆசிரியர் அடிப்பட்ட விஷயம் பக்கத்துக் கிராமங்களுக்கெல்லாம் பரவிவிட்டது. மாணவர்களும், பள்ளி ஆசிரியர்களும் மற்றவர்களும் அவர் இல்லம் வந்து விசாரித்துப் போனார்கள். அவர்களுக்கெல்லாம், ''யாரோ அடையாளம் தெரியாதவர்கள் அடித்துவிட்டார்கள், யாரை அடிக்கப் புறப்பட்டார்களோ, பொல்லாத நேரத்தில் நான் போய் மாட்டிக்கொண்டேன்'' என்று அவர் கூறுவார்.

ராமலிங்கம் மனசு மட்டும் ஒரே நிலையில் இல்லை! 'ஒப்புக்காவது ஒருமுறை போய்விட்டுத் தான் வரவேண்டும். சேசே, போகக் கூடாது. நம்மைச் செலக்ஷனிலே வேணுமென்றே பெயிலாக்கியவரிடம் நமக்கென்ன வேலை? ஆனால் போய்த்தான் பார்க்க வேண்டும். நம்மேல் யாரும் சந்தேகப்படக்கூடாதே!' என்று ஏதேதோ நினைத்தான்.

''எசமான், எல்லோரும் நம்ம வாத்தியாரைப் பார்க்கப் போறாங்க நீங்கள் மட்டும் ஏன் போகலே? ஏன், நீங்க ரெண்டு மூன்று நாளாக ஒரு மாதிரியாய் இருக்கி

நீங்களே?'' என்று சற்றுக் குரலை தாழ்த்திக் கேட்டான் சங்கரன்.

ஏளனம் பதிந்த அந்தக் கேள்வியைப் புரிந்துகொண்டான் ராமலிங்கம். அவன் மனத்தில் யாரோ ஊசியால் 'சுரு'க் கென்று குத்துவது போலிருந்தது.

''ஆமாம், சங்கரா. போகலாம்னு தானிருக்கேன்'' என்று கூறினான்.

''ஆமாம் எசமான். வாத்தியாரும் உங்களை வரச்சொன்னாரு. பார்க்கணுமாம்.''

''ஆ, வாத்தியாரு வரச்சொன்னாரா?''

''ஏன் எசமான், அப்படிப் படபடன்னு பேசறீங்க? வாத்தியாரைப் பார்க்கப் போயிருந்தேன். அவர் உங்களை வரச்சொல்லி என்னிடம் சொல்லி அனுப்பினாரு. எந்தப் பாவிப் பயலோ புத்தி இல்லாமெ வேணும்னு செய்திருக்கிறான். என்றாவது ஒரு நாள் அவன் மனச் சாட்சி அவனை..'' சங்கரன் வார்த்தையை முடிப்பதற்குள். ''சரி சரி, போய்விட்டு வா. நான் சிறிது நேரத்தில் அங்கே போகிறேன்'' என்று கூறி மாடிக்குப் போய்விட்டான் ராமலிங்கம்.

''வணக்கம் சார்'' என்று கை கூப்பி கும்பிட்டவாறே உள்ளே நுழைந்தான் ராமலிங்கம்.

''சார், உங்கள் உடம்பு எப்படியிருக்கிறது? எந்தப் பாவிப்பயலோ இப்படிச் செய்திட்டாங்களே! நான் வரலாம்னுதான் நினைச்சுப் புறப்பட்டேன். சங்கரனும் நீங்க வரச் சொன்னதாகச் சொன்னான்.''

''ஒன்றுமில்லை, ராமலிங்கம். இன்னும் குணமடைவதற்கு இரண்டு வாரம் செல்லும் போலிருக்கிறது. நம்ப ஊர் நாட்டு வைத்தியர்தான் என்னைப் பரிசோதித்து வருகிறார். இன்னும் வீக்கங்கள் போவதற்கே இரண்டு நாளாகுமாம். விஷயத்தைச் சொல்லாமல் ஏதேதோப் பேசுகிறேனே!''

''சொல்லுங்கள் சார்''

''இப்போது எப்படிப் படிக்கிறாய்? 'செலக்ஷன்' இல்லையென்று சொன்னவுடனேயே ஆத்திரப்பட்டுப் புத்தகத்தை வீசியெறிந்து விட்டுச் சும்மா இருக்கிறாயோ, என்னவோ!''

''இல்லே சார். இப்பப் படிச்சுக்கிட்டுத்தானிருக்கிறேன். அக்டோபருக்காவது படிக்க வேண்டாமா?''

''ஏன் இந்தப் பரீட்சைக்கே போக முடியாதோ? அடுத்த வாரம் 'செலக்ஷ'னில் தவறிவிட்டவர்களுக்கெல்லாம் மறுபடியும் ஒரு பரீட்சை நடத்தப் போகிறோம். அதில் நீ தேர்வு பெற்றுவிட்டால் தாராளமாகப் பரீட்சைக்குப் போகலாம்.''

''ஆ! உண்மையாகவா சார்?''

''ஆமாம்; அதோடு இன்னொரு விஷயம். நம் பள்ளியின் வருடாந்தர விழா இன்னும் இரண்டு மாதத்தில் நடக்கப்போகிறது. அதற்கு ஒரு நாடகம் நடத்தப்போகிறோம். அதில் உனக்கும்..''

''எனக்கு நாடகத்திலே நடிச்சுப் பழக்கமில்லையே சார். பள்ளிக் கூட்டத்தில் பேசப் போனாலே கை கால்களெல்லாம் நடுங்குகின்றன.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. பத்துப்பதினைந்து தடவை ஒத்திகை நடத்தினால் போதும். உனக்கு நடிக்க வந்திடும். சரி, அந்த நாடகத்தின் கதையை லேசாகச் சொல்லி விடுகிறேனே'' என்று ஆரம்பித்தார்:

கதையில் பாதியைச் சொல்லி முடித்திருப்பார். ராமலிங்கத்தின் இதயத்துடிப்பு இப்போது சொல்லொணு வேகத்தோடு ஓடிக்கொண்டிருந்தது. 'நான் செய்ததைத் தான் எனக்குக் கதைபோல் கூறுகிறாரோ?' என்று எண்ணினான்.

ஆசிரியர் மீண்டும் ஆரம்பித்தார்: ''ஆத்திரத்தால் அறிவிழந்த அந்த மாணவன், நாலைந்து ஆட்களை வைத்து, அன்றைக்கு மறுநாள், அந்த ஆசிரியர் வீடு திரும்பும்போது அவரை நையப் புடைத்துவிட்டான்.'' சக்தி குன்றியிருந்ததினால் அவருக்கு மூச்சு வாங்கியது. தண்ணீர் குடித்தார்.

'கதைபோல் கூறுகிறாரே ஒரு சமயம் நாம் செய்தது தெரிந்து விட்டதோ!' என்று எண்ணிய ராமலிங்கத்தின் முகம் கறுத்தது. வேர்வைத் துளிகள் முகத்தில் அரும்பிட்டன. அங்கே உட்கார்ந்திருக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை. ஏதாவது சாக்குச் சொல்லி

விட்டுப் போய்விடலாமென்று நினைத்தான்.

அவனுடைய பரப்பரப்பை உணர்ந்த ஆசிரியர், மீண்டும் ஆரம்பத்தார்: ''அப்போதும் அந்த ஆசிரியர் அவன்மீது கோபம் அடையவில்லை. அவனுக்கு எப்படி யாவது நல்ல புத்திமதியைச் சொல்லி அவனைத் திருத்த வேண்டும் என்று தீர்மானித்தார். எந்த ஆசிரியருக் குத்தான் தன் மாணவனைப் பரீட் சைக்கு அனுப்பக்கூடாது என்று தோன்றும்?

'இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்'

என்ற வள்ளுவர் வாய்மொழி அவர் மனத்திலே தோன்றியது.'' முடிக்கவில்லை ஆசிரியர்.

''சார், நீண்ட நேரம் பேசி விட் டீர்கள். உடம்பு கெட்டுவிடும். இரண்டு நாள் பொறுத்து வரு கிறேன்'' என்று கூறிவிட்டு ஆசிரி யர் பதிலுக்கும் காத்திராமல் விரைவாக வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தான் ராமலிங்கம்.

ஆசிரியர் லேசாகச் சிரித்தார். 'கட்டாயம் அவன் நல்லவனுகத் திருந்திவிடுவான்' என்று எண்ணி மகிழ்வுகொண்டார்.

ராமலிங்கத்தின் மனத்தை ஏதோ உறுத்திக்கொண்டிருந்தது. பெற்றோர்கள் கேட்டதற்கு உடம்பு சரியில்லை என்ற பொய் யைக் கூறிவிட்டான். இரவும் பக லும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

ஆறு நாட்கள் உருண்டோடி விட்டன. ராமலிங்கத்தை வற் புறுத்தி அழைத்துக்கொண்டு போய் டாக்டரிடம் காட்டினார் கள் அவனது பெற்றோர்கள். டாக்டர், ''உங்கள் மகன் ஏதோ மனத்தில் வைத்துக்கொண்டு இப் படி நாளுக்கு நாள் மெலிந்து போகிறான். என்னவென்று கேட்டு அதைப் போக்குங்கள். அப்போது தான் அவன் நன்ருக்க் குணமடைய முடியும்'' என்று கூறிவிட்டார். எப்படிக் கேட்டும் அவன் உண்மை யைக் கூற மறுத்துவிட்டான். பெற்றோர்கள் அவன் நிலைக்குக் கவலைப்பட்டு வந்தார்கள்.

'நாம் செய்தது பெரிய தவறு. எவ்வளவு பெரிய பாதகச் செயலைப் புரிந்திருக்கிறோம். படிக்காதது என்னுடைய தவறுதானே? நான் வகுப்புகளில் எவ்வளவு தவறுகளைச் செய்திருக்கிறேன்? நான் செய்த தவறுகளால் எத்தனை ஆசிரியர்களின் வெறுப்புக்கு ஆளாகிவிட்டேன்? நல்லபடி நடந்திருந்தால் இதெல்லாம் நடந்திருக்குமா? நான்தான் அறிவிழந்து தகாத செயலைப் புரிந்துவிட்டேன்! அவர் எவ்வளவு நல்லவர்! ஊரெல்லாம் அவரை நல்லவரெனப் புகழுகிறது. நல்லவர் இல்லாவிட்டால் ஒரு கதை சொல்லுவதுபோல் என் தவற்றையே எனக்கு உணர்த்துவரா? அவர் மட்டும் போலீசாரிடம் புகார் கூறியிருந்தால்......ஆம், என் மனத்திலுள்ள சுமை நீங்க வேண்டுமானால் நான் கட்டாயம் ஆசியரிடம் சென்று மன்னிப்புக் கேட்க வேண்டும்.

'சே சே மன்னிப்பாவது, கேட்கவாவது? நான்தான் செய்தேனென்று அவருக்கு நிச்சயமாக எப்படித் தெரியும்? இப்போது நான் போய் மன்னிப்புக் கேட்டால் நானாக அல்லவா மாட்டிக் கொள்வேன்? மன்னித்தாலும் ஊரார் என்ன சொல்வார்கள்? என்னுடன் படிக்கும் மாணவர்கள் என்ன சொல்லுவார்கள்? அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பேன்? பிறருக்காக மன்னிப்புக் கேட்காமலிருப்பது நியாயமா? ஊரார் நகைக்கட்டும். அப்போதுதான் இன்னும் நன்றாக எனக்குப் புத்தி வரும். கட்டாயம் அவரிடம் போய் மன்னிப்புக் கேட்கத்தான் போகிறேன்' என்றத் தீர்மானத்தோடு மனத்திலெழுந்த எண்ணப் போராட்டம் முற்றுப் பெற்றது.

ராமலிங்கம் லேசாகத் தலை தூக்கினான். எதிரிலே சுவரில் மாட்டப்பட்டிருந்த காந்தி, புத்தரின் படங்கள் அவன் கண்ணில் தெரிந்தன. இரு நிஜ உருவங்கள்!..ஆம்!..' காந்தி. புத்தர்.. உயிருள்ள உருவங்கள்! காந்தி புன்னகை பூத்த முகத்துடன் கூறினார்.

"தம்பீ, தவறு செய்துவிட்டாய். இனி அதை நினைத்துக் கவலைப்படாதே. தைரியமாகச் சென்று உன் ஆசிரியரிடம் மன்னிப்புக் கேள். தவறு செய்த எவன் ஒருவன் தைரியமாக மன்னிப்புக் கேட்கிறானே, அவனே மீண்டும் மனிதனாக வாழமுடியும். போ. தைரியமாகப் போய்க் கேள்."

ராமலிங்கம் கண்களைக் கசக்கிக் கொண்டான். பிறகு "சங்கரா!" என்ற கூவியபடியே வெளியில் ஓடி வந்தான்.

"எசமான், வாத்தியாரு ரொம்ப டேஞ்சரா யிருக்கிறுங்க. ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கிட்டுப் போனுத்தான் பிழைப்பாராம். உங்களிடம் சொல்லிவிட்டுக் காரை எடுத்துக்கிட்டுப் போகலாம்னு ஓடிவந்தேன்" என்று சங்கரன் அப்பாவிடம் சொல்லிக்கொண் டிருந்ததைக் காதில் கேட்ட ராமலிங்கம் அப்படியே இடிந்துவிட்டான்.

சிறிது நேரங் கூட அவனுல் அங்கே நிற்க முடியவில்லை. திரும்ப ஓடினுன் தன் அறைக்கு. கட்டிலில் குப்புறப் படுத்து, விம்மி விம்மிக் குழந்தை போல் அழுதான்.

அழுதுகொண் டிருந்த ராமலிங்கம் எழுந்தான். கண்ணீரைத் துடைத்துக்கொண்டான், என்ன தீர்மானித்தானே! மாடியை விட்டு இறங்கினுன். ஆசிரியர் இல்லம் அடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் அவன் கால்கள் ஓடின.

இருண்டு கிடந்த அந்தக் கிராமத்தின் சாலையில் அவன் தனிமையில் ஓடி வந்துகொண் டிருந்தான்.

ஓடி வந்தவன் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். இரண்டு விளக்கொளிகள் தெரிந்தன. இல்லை, இல்லை. அவன் கண்களுக்கு காந்தி, புத்தருடைய புன்னகை பூத்த முகங்கள் இரண்டு தெரிந்தன!

வேகமாக வந்த கார் அவன் மீது மோதி ஒரு குலுங்குக் குலுங்கி விட்டு நின்றது. கதவைத் திறந்து டிரைவர் ஓடிவந்தான். சங்கரனும் ஓடி வந்தான். அடிபட்ட அந்த உருவத்தின் முகத்தைப் பார்த்ததும் ஒரு துள்ளுத் துள்ளினுன் சங்கரன்.

"டிரைவர், சின்ன எசமான்!" என்று அவனை அறியாமல் அலறினுன்,

"ஆ!" என்று ஓரடி பின் வாங்கினுன் டிரைவர்.

"யாரது..சங்கரனு?...சங்கரா, உடனே..நான் ஆசிரியரைப் பார்க்க வேண்டும்...." வேதனை நிறைந்த அவனது நெஞ்சத்திலிருந்து வந்த குரலே புது மாதிரியாக இருந்தது. இதைச் சொல்லி முடிப்பதற்கு நீண்ட நேரமாயிற்று அவனுக்கு.

டிரைவரும் சங்கரனும் ராமலிங்கத்தைத் தூக்கிக் காரில் ஆசிரியருக்குப் பக்கத்தில் கிடத்தினுர்கள்.

கார் பறந்தது!

"ராமலிங்கம், நீயா காரில் அகப்பட்டுக் கொண்டாய்?" மெல்லிய குரலில் கேட்டார் ஆசிரியர். அந்தக் குரிலில்தான் அவரால் கேட்க முடிந்தது.

"ஆமாம்..ஆமாம் சார்.. என்னை மன்னியுங்கள், சார்.. இந்தப் பாவிதான்..உங்களை.. ஆட்கள் வைத்து அடித்து..இந்த நிலைக்கு ஆளாக்கியது. உங்களிடம் மன்னிப்புக்.....கேட்கலாமென்று தான்..ஓடி வந்தேன். மன்னியுங்கள் சார்.."

ஆசிரியர் எங்கேயோ பார்த்தார். "தவறு செய்தவன் நீதான் என்று தெரிந்த உடனேயே உன்னை மன்னித்து விட்டேன். உயிருக்கு மன்றுடிக் கொண்டிருக்கும் நான் திருந்தி விட்ட உன்னை இந்தக் கோரக் காட்சியிலா காணவேண்டும்? ஐயோ!"

ஆசிரியர் சொன்னதெல்லாம் ராமலிங்கத்தால் கேட்க முடியவில்லை. அதற்குள் அவன் உணர்விழந்துவிட்டான்.

"இந்தப் பையன் பிழைக்க மாட்டான். உடலிலிருந்த ரத்தமெல்லாம் போய்விட்டது.." முடிக்கவில்லை இன்னும் வைத்தியசாலை டாக்டர்.

அதற்குள், "சார் சார், என் ரத்தத்தைக் கொடுத்து எப்படியாவது எங்க எசமானைக் காப்பாற்றுங்கள், சார்" என்று பதறினுன்

விசுவாசமுள்ள வேலைக்காரன் சங்கரன்.

மற்றொரு டாக்டர் ஆசிரியரைப் பரிசோதித்துக்கொண் டிருந்தார். ராமலிங்கம் பிழைக்க மாட்டான் என்று கேட்டவுடன், ''பிழைக்க மாட்டானா?'' என்று கடைசி வார்த்தையுடன் ஆசிரியர் மூச்சு அடங்கியது. ராமலிங்கத்தின் உயிரைக் கொண்டு செல்ல வந்த காலன் அவனை விட்டு விட்டு ஆசிரியரின் உயிருடன் திருப்தியடைந்து விட்டான். ஆம், ராமலிங்கம் இப்போது பிழைத்துவிட்டான்!

மூளைக்கு வேலை!

ஏ. கே. வி.



படத்தில் ஒரு திராட்சைக் கொத்தைப் பார்க்கிறீர்கள், அல்லவா? அதேபோல ஒரே கோட்டினால், வைத்த பென்ஸிலை எடுக்காமல் வரையுங்கள், பார்க்கலாம்.



படத்தில் புள்ளிகளாகத் தெரியும் பத்துக் கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஆபத்து அருகில் வந்துவிட்டது என அறிந்த தலைவர், அதிலிருந்து ஏதோ 4 கப்பல்களை மாத்திரம் பிரித்து, (மற்றவைகள் அதே இடத்தில் இருக்கவேண்டும்) பத்துக் கப்பல்களையும், வரிசைக்கு நான்கு வீதம் ஐந்து வரிசைகளாகும்படி புதிய இடத்தில் நிறுத்தி விட்டார். எங்கே நீங்களும் அவ்வாறு செய்து, வருங்காலக் கப்பல் தலைவர்களாக விளங்குங்கள்.



படத்தைப் பார்த்தவுடனேயே 5 வயதுக் குழந்தையும் 'இச்சுபேடு' என்று மழலைச் சொல்லில் சொல்லும்; ஆம். அது ஸ்பேடு என்ற சீட்டின் பெயர். நீங்கள் இதை 3 பாகமாகச் செய்து (ஜாக்கிரதை, ஒரு சிறு துண்டும் வீணாகக் கூடாது) அத்துண்டுகளை ஒட்டி, இருதயத்தின் அமைப்பு போன்ற உருவத்தைச் செய்யவேண்டும். எங்கே, உங்கள் மூளை இருதயத்துடன் ஒத்துழைக்கிறதா என்று பார்க்கலாம்?



படத்தில் காட்டியவாறு 20 தீக்குச்சிகளை எடுத்து வைக்கவும். அதில் ஒன்று 6 குச்சிகளினாலும், மற்றொன்று 14 குச்சிகளினாலும் அடைக்கப்பட்டுள்ளது. ஒன்று மற்றொன்றைப்போல் 3 மடங்கு உள்ளது.

இப்பொழுது நீங்கள் பெரிய பாகத்திலிருந்து ஏதாவது ஒரே ஒரு குச்சியை எடுத்துச் சிறிய பாகத்திற்கு மாற்றி, 13 குச்சிகளினால் அடைக்கப்பட்ட பாகம், 7 குச்சிகளினால் அடைக்கப்பட்ட பாகத்தைப் போல், 3 மடங்கு உள்ளதாகச் செய்யவும். மற்ற 12 குச்சிகளும் முன் இருந்த இடத்திலேயே இருக்கவேண்டும்.

(விடை: 24-ஆம் பக்கம்)

சிலைப் பெண்

ராஜம்

அன்று நான் அந்தப் பாதையோரம் போய்க்கொண்டிருக்கும்பொழுது, வானம் இருண்டது. வையகமும் இருண்டு மழை சோவெனப் பெய்தது.

அந்த மழையில்—

ஊருக்கு ஒதுப்புறமாக இருந்த ஒரு வீட்டின் முன்போய் நின்றேன்.

இடி பலமாக இடித்தது. மின்னல் அதிவேகமாகத் தாக்கியது. பேய்க்காற்று சுழன்று வீசியது.

சாரல் நிற்கவொட்டாமல் விரட்டியது. வாசல் ஆளோடியில் பதுங்க வழியில்லாமல் காற்றில் தம்பட்ட மடித்துக்கொண்டிருந்த கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தேன்.

வீடு சோபை இழந்து கிடந்தது. வீட்டின் கூரை சரிந்தும் சிதைந்தும் கிடந்தது.

பார்வை பாய்ந்த இடமெல்லாம் பாழாக, வெறிச்சென்று கிடந்தன. யாரையும் காணோம்!

ஒரு மூலையில் மட்டும்—

ஒரு பாறை நிற்கவைக்கப்பட்டிருந்தது. யாரோ ஒரு சிற்பி அதை உருவாக்க அங்கே கொண்டு வந்து வேலையைத் தொடங்கியிருக்க வேண்டும். நியதிக்குப் புறம்பாக அந்தப் பாறையில் கால்கள் மட்டும் அதி உன்னத வேலைப்பாட்டுடன் செதுக்கி இருந்தன. அதற்குமேல் வாய், வயிறு என்று உருவத்தை அமைக்கவேண்டும்.

நான் ஆச்சரியமடைந்தேன். என் திறமைக்கு இது ஓர் ஆணிவேர் என்று உணர்ந்தேன். ஏதோ ஒரு புதையல் கிடைத்துவிட்டதாக எண்ணினேன்.

நடையில் சிற்றுளிகளும் சுத்தியல்களும் துருவேறிக் கிடந்தன. அதற்குக் கொஞ்ச தூரத்தில் எலும்புக்கூடு ஒன்று கிடந்தது. நான் கலங்கவில்லை!

கொஞ்ச நாளைக்குமுன் அந்த வீட்டில் நாகராஜன் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்தது எனக்குத் தெரியும். ஆகையால் அவனது எலும்புக் கூடுதான் அது என்று எனக்குப் பட்டது. சிறிது நேரம் யோசித்த பிறகு அதை எடுத்துக் கொண்டு போய்க் கொல்லைப் புறம் போட்டுவிட்டு வந்தேன்.

பிறகு—அந்த அழகான கல்லில் ஒரு பெண்ணின் வடிவை உருப்பெறச் செய்ய எண்ணம் உண்டாயிற்று.

இரவு பகலின்றி அந்தப் பாறையைச் சிற்றுளிகளுக்கு இரையாக்கி, நான் எண்ணியபடி ஒரு பெண்ணின் திரு உருவை அழகாக, அருமையாக அமைத்தேன்.

அமைத்த மறுகணம்—

வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது——''தம்பீ!..'' என்று யாரோ கூப்பிடுவது கேட்டது சுற்று முற்றும் பார்த்தேன். யாரையும் காணோம்.

லட்சணங்கள் அணுவளவும் பிசகாமல் செதுக்கிய எதுவும் உயிர் பெற்று எழுந்துவிடுமாம். அப்பொழுது அங்கச் சிதைவு ஏதாவது செய்துவிட வேண்டும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அது என் நெஞ்சில் எழவே, செதுக்கிய உருவைப் பார்த்தேன்.

கற்சிலை அப்படியே இருந்தது.

என் ஆச்சரியம் அளவு மீறியது. பேசாமல் அவளை மறுமுறை நோக்கினேன்.

''என்னை ஏன் அப்படிப் பார்க்கிறாய்? என்னை உனக்குத் தெரிகிறதா?'' என்று கேட்டாள்.

''தெரியவில்லை'' என்றேன்.

அவள் சிரித்தாள். ''தெரியாதுதான்! ஆனால் உன் உள்ளத்தில் எழுந்த உருவம் நான்தான் என்று உனக்குத் தெரியுமல்லவா?''

''உண்மைதான்!''

''தம்பீ! நினைத்ததைக் கல்லில் வடிக்கும் திறமை உனக்கு இருக்கிறது. அக்கறை காட்டும் மனிதர்கள் இங்கே யாரும் இல்லை. என்னுடன் வா. எனக்கு ஒரு மாளிகை அமைத்துக் கொடு.''

''எங்கே?''

''எங்கள் நாட்டிற்கு வா! பேய் உலகத்திற்கு!''

நான் மறுத்தேன். ''முடியாது'' என்றேன்.

''ஏன்?''

''நீங்கள் பேய்கள்! உங்கள் சகவாசம் வேண்டாம். தொந்தரவு செய்யாதே. நான் வரமாட்டேன்.''

அவள் பஞ்சு நெஞ்சு விம்மியது. ''தம்பீ! பத்தாண்டுகளுக்குப் பிறகு முதல் முதலில் இந்த வீட்டில் காலடி வைத்தவன் நீதான்! உன்னை நாங்கள் என்ன செய்து விட்டோம்? பயப்படாதே, தம்பீ! மக்கள்மீது பேய்களுக்கு அளவு கடந்த ஆசை உண்டு. அதனால் தான் மக்களைக் கண்டதும் அவை தம் நிலையை மறந்து அவர்களிடம் பேசவேண்டும் என்று நெருங்குகின்றன. அவற்றின் உருவம் மற்றவர்களுக்குத் தெரியாது. ஆனால் மக்களில் சிலர் பேய்கள் நெருங்குவதை ஓரளவு தெரிந்து கொள்ளும் சக்தி உள்ளவர்கள். அவர்கள் பேய்கள் நெருங்குவதைக் கண்டு பயந்து புரளி செய்து, பேய்கள்மீது இல்லாத பழியைச் சுமத்தி, கொதிக்கும் உள்ளத்தில் கோல்விட்டுத் துழாவுகிறார்கள்.

''அவ்வளவுதான்! வீணாகப் பயப்பட வேண்டிய அவசியமில்லை. தம்பீ! அறியாமல் நீ எனக்கு ஒரு பெரிய உதவியைச் செய்திருக்கிறாய்! அதற்காகவே உன்னை அழைத்துப்போக விரும்புகிறேன். தட்டாதே. என்னுடன் வா'' என்றாள்.

ஆச்சரியம் என்னை உந்திற்று. ''நான் அப்படி என்ன உதவி செய்தேன்?'' என்றேன்.

''சொல்லுகிறேன் கேள். நான் பேயுலக இளவரசி! என் பெயர் சாரா. சுதா என் சிநேகிதி, மந்திரியின் மகள். அவள் என்னை விட இனிமையாகப் பாடுவாள். அதனால் என்னை மணம் செய்து கொள்ள இருந்த கந்தர்வன், ஒரு நாள் இந்திர சபையில் அவள் பாட்டைக் கேட்டு மனம் மாறி, அவளை மணந்துகொண்டான். அதனால் மனம் உடைந்த நான் தற்கொலை செய்துகொண்டேன். அதில் துன்பம் தொலைந்துவிடும் என்று எனக்கு அப்பொழுது பட்டது. ஆனால் இப்பொழுது நினைத்தாலே நெஞ்சம் வெடிக்கிறது.

''தற்கொலை கோழைத்தனம். உயிரை மாய்த்துக் கொள்வது மடமை. பிறகுதான் இந்த உண்மை எனக்குத் தெரிந்தது. உடலை விட்ட உயிர் பேயுலக மன்னன் ஆட்களிடம் சிக்கிக்கொண்டது. அதை அவர்கள் ஒரு பெட்டிக்குள் அடக்கம் செய்து தந்தையிடம் கொடுத்தார்கள்.

''நான் புத்தியில்லாமல் செய்து கொண்ட தற்கொலை என்பது அவருக்குத் தெரிந்திருந்தும் மன்னிப்பு அளிக்க விருப்பமின்றி, 'இனிமையும் இன்னலும் கலந்த பூவுலகில் ஆவியாகச் சுற்றி அலைவாயாக' என்றார்.

''என் உயிர் பதறியது.

''அவர் உள்ளம் கசியவில்லை. 'சாரா! தந்தை - மகள் என்று நான் பாரபட்சம் பார்க்கக் கூடாது. என் கடமை, தற்கொலை செய்துகொண்டவர்களைத் தக்கபடி தண்டிக்க வேண்டும்' என்றார். 'கடுகளவும் கடமையில் தவற வேண்டாம், அப்பா. எனக்கு எப்பொழுது விமோசனம் என்று மட்டும் சொல்லுங்கள். போதும்' என்றேன்.

''அதற்கு அவர்—'உன்னைப் போல் அழகு இந்த உலகில் யாருமில்லை. ஆகையால் புகழ் பெற்ற எந்த மானிடனாவது உன் வடிவத்தைக் கல்லில் உருப்பெறச் செய்தால், உன் வினை தீரும்' என்றார்.

''நல்ல சிற்பியைத்தேடிக் காலம் கழித்தேன். வருஷங்கள் மூன்று கடந்தன. கடைசியில் ஒரு சிற்பியைக் கண்டேன். அவன் உன்னைப் போல் கலை நுணுக்கம் தெரிந்தவன். நான் அந்தச் சிற்பியின் உள்ளத்தில் புகுந்து என் உரு

வத்தை அமைக்கும் ஆற்றலை அவனுக்கு அளித்தேன்.

''அவன் பொற்பாதப் பிரியன். முதவில் அழகிய பாதங்களை அமைத்தான். படிப் படியாக உருவத்தை அமைக்க இருந்தான். அதற்குள் ஒரு நாள் இரவு இடிவிழுந்து தூங்கிக் கொண்டிருந்த சிற்பி இறந்தான். அவனுடைய எலும்புக் கூடுதான் நீ கண்டது. பிறகு உன்னைக் கண்டேன். மழைக்கு ஒதுங்கித சமயம் பார்த்து உன் உள்ளத்தில் புகுந்து என் உருவத்தை வடிக்கச் செய்தேன். வடித்தாய். என் சாபம் தீர்ந்தது'' என்றாள்.

நான் அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தேன். ''இளவரசி! தங்கள் எண்ணம் வீணாகப் போகத்தானே உங்கள் தந்தை இடியால் அந்தச் சிற்பியைக் கொன்றார்?''

''அதுதான் இல்லை! கேள்: கதையை! ராஜலிங்கம் வட்டி வியாபாரி. யாராவது பணம் கேட்டால் ஒன்றுக்கு நாலாக வட்டி வாங்குவான். குறித்த தேதியில் தராவிட்டால் எதிரில் திட்டுவான். வாய்க்கு வந்தபடி பேசுவான். ஆனால் புறம் பேச மாட்டான். அதனால் - அவன் இறந்து, பிறக்கும்பொழுது சிற்பியாகப் பிறந்தான்.

''தம்பீ! மனிதப் பிறப்பின் மேன்மையை உணர்ந்தவர்கள் சிலர் உண்டு. அவர்கள் இறக்கும்முன் சில அற்புதங்களைச் செய்து உலகம் உள்ளளவும் அவர்களை நினைக்கும் படிச் செய்கிறார்கள். அப்படி உணர்ந்தவர்களில் அவனும் ஒருவன். அவன் நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்தாலும் எண்ணமெல்லாம் கலையில் குழைந்து என்றும் மணம் வீசும் சிற்பத்தில் லயித்தது. கரடு முரடான கற்களைக் கடவுள் வடிவங்களாக்கினான். அவனைத்தான் முதலில் தேர்ந்தெடுத்தேன். அவன் ஆயுள் முடிந்துவிட்டது. நேராக - எல்லாருக்கும் தெரிவதுபோல் வெட்ட வெளிச்சமாக அழைத்துக்கொண்டு போனால் - பூலோகம் எமலோகம், சொர்க்கலோகம், என்று என்ன இருக்கிறது? அதனால் இடியின்மீது பழி போட்டு, எமன் காலம் தாழ்த்தாமல், அவனைக் கொண்டு போனான். நீ என் தந்தையைப்பற்றித் தவறாக எண்ணுவது முற்றிலும் தவறு'' என்றாள்.

''அப்படியானால் வீட்டில் தூக்குப் போட்டுக்கொண்ட நாகராஜன்..'' நான் வார்த்தையை முடிப்பதற்குள் அந்தப் பெண் குறுக்கிட்டாள்.

அம்மா : எதுக்குடா ரமணி, இரண்டு ஸ்பூன்கள் வாங்கிண்டு வந்திருக்கே? ஒண்ணு போறாதோ?

ரமணி : டாக்டர்தான் வேளைக்கு 'ரெண்டு ஸ்பூன்' வீதம் சாப்பிடச் சொல்லியிருக்காரே, அம்மா!

—பி. கலாசாமி, தூத்துக்குடி.

"தம்பி! அவன் முன் ஜன்மத்தில் ஏழை உழவன் ஒருவனிடம் மாடாக இருந்தான். அப்பொழுது அவனுக்கு இம்மி அளவேனும் தெம்பில்லை. உழவன் வேலை வேலையென்று மாட்டைச் சதா வேலை வாங்கிக்கொண்டிருந்தான். மாடு உருவில் இருந்த அவனும் இடக்குச் செய்யாமல் உழைத்து வந்தான். மாண்டு பிறக்கும்பொழுது மனிதனாகப் பிறந்தான். பிறந்து பயனென்ன? படித்தான். பண்டித பூஷணம் - பண்டித ரத்னம் - என்று பட்டங்கள் பல பெற்றான். ஆனாலுமென்ன? பிழைக்க அவனுக்கு வழி தெரியவில்லை.

"படித்தவன் கண்ணியமாகக் கல்வி அறிவு இல்லாதவர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்தால் என்ன? நாணயமான வேலை எதுவானாலும் செய்யத் தடையென்ன? அழகு குறைந்துவிடுமா? அந்தஸ்து தாழ்ந்துவிடுமா?

"அநுபவம் இல்லாத அவன் ஒரு வேளைச் சோற்றுக்குக்கூட வழி தேடிக் கொள்ளாமல் தூக்கிலிட்டுக்கொண்டான். இப்பொழுது பேயாகத்தான் இருக்கிறான். தம்பி! என்னுடன் வா! காட்டுகிறேன். அப்படியே எனக்கொரு மாளிகையைக் கட்டிக்கொடு" என்றாள். நான் பதில் பேசவில்லை. "சரி" என்றேன்.

உடனே அவள் வலது காலை ஓங்கித் தரையில் உதைத்தாள்.

உதைத்த மறுகணம்—

பூமி கொஞ்சம் வெடித்தது. அதிலிருந்து மொட்டு ஒன்று முளைத்தது. இதழ்கள் விரித்தன. அது ரதமாக மாறிற்று. அந்தப் பெண் அதில் ஏறி உட்கார்ந்தாள். நானும் அவளைத் தொடர்ந்துபோய் எதிரில் உட்கார்ந்தேன்.

அடுத்த விநாடி—

ரதம் சுழன்றது. பூமி சுழன்றது. கண்கள் சுழன்றன. நான் நினைவிழந்தேன். கண் விழித்துப் பார்த்தபோது, "டம் டம் டம டம் டம் டம் டம் டமக டம் டம்" என்று ஒரு பெரும் ஓசையுடன் எங்கள் முன் ஒரு பிரம்மாண்ட வாயில் காணப்பட்டது.

நாங்கள் அதற்குள் நுழைந்தோம். போகப் போக அந்த வழி வளர்ந்துகொண்டே போய் ஒரு பெரிய அறையை அடைந்தது.

அந்த அறையில் நாகராஜன் இரண்டு கழுதைகளுக்குக் கத்திக் கத்திப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் கத்துவது இன்னது என்று தெரியாமல் கழுதைகள் அவனை உதைத்துக்கொண்டிருந்தன. அவன் அதுபோல் அவைகளுக்குப் பாடம் சொல்லாவிட்டால் சவுக்கால் அடிக்க இருவர் அவன் முன் நின்றுகொண்டிருந்தார்கள். நாகராஜன் ரத்தக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தான்.

"இதிலிருந்து அவன் ஆயுள் முடியுமட்டும் தப்ப வழியில்லையா?" என்று கேட்டேன்.

"தற்கொலை செய்துகொள்ளா விட்டால் எவ்வளவு நாள் இயற்கை யாக உயிர்வாழ முடியுமோ அவ் வளவு நாள் இங்கே உழைத்தால் - இல்லை, அவஸ்தைப் பட்டால் - வேறோர் அறைக்கு அவனை மாற்று வார்கள். அங்கே ஒரு குளம் இருக் கும். அந்தக் குளத்தில் திடீர் திடீ ரென்று நெருப்புக் கட்டிகள் தோன்றி அவனைப் பொசுக்கும். தண்ணீர் வெந்நீராகி அவன் உடலை வதைக்கும். வெந்து வேதனைக்குட் படாமல் கரை ஏறித் தப்பிக்க முயன்றால் கரையில் நிற்கும் இரு வர் அவனை ஈட்டியால் குத்துவார் கள். இப்படிக் கொஞ்ச காலம் அநுபவிக்கவேண்டும். இதற்குப் பிறகு விடுதலை உண்டு" என்றாள்.

நான் நிலைகுத்தி நின்றேன்.

அப்பொழுது—ஒரு பெரிய சுழல் படிக்கட்டு, வானை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. அதில் ஒருவன் ஏறிக்கொண்டிருந்தான்.

அவன் ஏற முடியாமல் ஒரு கணம் நின்றால் ஊர்ந்து தொடரும் பாம்புகள் அவனைச் சீறி விரட்டி யடித்துக்கொண்டிருந்தன.

"அவன் செய்த தவறு என்ன?" என்றேன்.

"சோம்பேறித்தனமே உருவாகக் கொண்ட மாணவன் அவன். பரீட்சையில் தவறிவிட்டான். மற் றச் சீடர்கள் அவமானப் படுத்து வார்கள் என்று எண்ணி விஷம் உண்டு தற்கொலை செய்துகொண் டான். தற்கொலை செய்துகொண்ட தால் பேயுலக மன்னன் - என் அப்பா - அவனுக்கு இந்தத் தண் டனையை அளித்திருக்கிறார். வா.. போகலாம். இந்நேரம் அப்பா கொலுச் சபையைவிட்டு அரண் மனைக்கு வந்திருப்பார். பிறகு இவைகளைச் சாவதானமாகப் பார்க் கலாம்" என்றாள்.

அந்தச் சமயம்—"இளவரசி! வந்துவிட்டீர்களா? மகிழ்ச்சி. நீங் கள் இல்லாமல் எங்களுக்குப் பொழுதுபோவது கஷ்டமாக இருக் கிறது. வாருங்கள். குளிப்பதற்கு

ஏற்பாடு செய்கிறேன்" என்றாள் ஒருத்தி.

அவள் பார்வைக்கு அரசி போல் அழகாக இருந்தாள்.

அவளை யாரென்று கேட் டேன்.

"தம்பி! எந்தச் சந்தே கத்தையும் உடனே தீர்த்துக் கொள்ள விரும்புகிறாய், பேஷ்! சொல்லுகிறேன்.

''மங்களேசுவரன் ஒரு மன்னன். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவளைத் தன் தங்கை மகன் அகிலேசுவரனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தான்.

''அகிலேசுவரன் ஒரு பைத்தியக்காரன். அவன் சிறுவனாக இருந்த பொழுதே அவன் அப்பா காட்டில் வேட்டையாடும்பொழுது புலியால் அறைந்து கொல்லப்பட்டார். அதிலிருந்து அந்த நாட்டை அகிலேசுவரனின் தாய் கண்ணும் கருத்துமாகக் காத்துவந்தாள். அண்ணன் மங்களேசுவரன் அவளுக்குத் துணையாக இருந்துவந்தான்.

''காலம் ஆண்டுகளை விழுங்கிக் கொண்டிருந்தது. அகிலேசுவரனுக்கு அரண்மனையில் இருக்கப் பிடிக்கவில்லை. ஒரு நாள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் மறைந்தான். எங்கே போனான், எதற்குப் போனான் என்று யாருக்கும் தெரியாது. இதற்குப் பிறகு மங்களேசுவரன் தான் போட்ட திட்டப்படி ஒரு நாள் தங்கையைச் சிறையில் அடைத்து மகளைக் கொன்று அந்த நாட்டிற்கும் ராஜாவானான்.

''குத்திக் கொல்லப்பட்ட அந்தப் பெண்தான், இவள். புரிந்ததா?'' என்றாள் அவள்.

''பிறகு அவள் தகப்பன் என்ன ஆனான்?''

''இயற்கையாக நோய்வாய்ப்பட்டு மரணமடைந்து எமலோகத்தில்—கற்கள் கொட்டிக் குவித்த பாதைக்குத் திமிசுக் கட்டைப் பணி செய்யும் மாடாகப் பிறந்தான்'' என்றாள்.

''அப்படியானால் பைத்தியக்காரன்?..'' என்றேன்.

''அரண்மனையை விட்டுப் புறப்பட்ட அவன் நடுக் காட்டில் திடீரென்று விழுந்து நரம்புத் தளர்ச்சி நோயால் தாக்குண்டு இறந்தான்'' என்றாள்.

திடீரென்று என் உள்ளத்தில் அலை மோதிக்கொண்டிருந்த ஓர் எண்ணம் அப்பொழுது வார்த்தைகளாக வெடித்தது.

''நான் முன் ஜன்மத்தில் என்னவாக இருந்தேன், உங்களால் சொல்ல முடியுமா?'' என்றேன்.

''ஏன் முடியாது. அந்தப் பைத்தியக்காரன்தான், நீ'' என்றாள்.

''என்ன! நானா?''—நான் வார்த்தையை முடிக்கவில்லை.

அதற்குள்—''என்னடா, நாணா, எழுந்திருடா; எட்டு மணிவரையில் தூங்குகிறாயே'' என்று என்னை எழுப்பினாள் தாய்.

என் கனவு சிதைந்தது.

விடை: மூளைக்கு வேலை



தந்திரம் பலித்தது

— மைதிலி —

பாத்திரங்கள்

துரைசாமி .. வரும்படி இல்லாத பல் டாக்டர்.
மங்களம் .. அவர் சகதர்மிணி
கோபு .. அவர்களுடைய பையன்.

காட்சி - 1

(துரைசாமி 'டிஸ்பென்ஸரி'யில் வேலையில்லாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். மனைவி மங்களம் வருகிறாள்)

மங்: ஏன்னா! இப்படிப் பல்லைக் குத்திண்டு உட்கார்ந்திருக்கேள்? அடுப்பிலே பூனை சுகமா நித்திரை செய்யறது. நீங்க டிஸ்பென்ஸரியிலே நன்னாக் குறட்டை விடறேள். ம்.....நான்தான் உங்க கிட்டே கிடந்து முழிக்கிறேன்.

(புடவைத் தலைப்பைப் பிடிக்கிறாள்)

துரை: அம்மா பரதேவதை! உன்னுடைய நாடகத்தை ஆரம்பிச்சிடாதே! யாராவது 'பேஷண்ட்ஸ்' வருவா. உள்ளே போ!

மங்: பேஷண்ட்டுமாச்சு! மண்ணாங் கட்டியுமாச்சு! வருவா பாருங்கோ, எமதூதர்கள் மாதிரி மளிகைக்கடைச் செட்டியாரும், பால்காரப் பழனிச்சாமியும் கடனுக்கு!

(கோபு வருகிறான்)

கோபு: (முகத்தைச் சுளித்துக் கொண்டு) அப்பா! என் பேரை அடித்து விட்டார்கள் இரண்டு மாதச் சம்பளப் பாக்கிக்காக. எனக்கு இப்பவே சம்பளப் பணம் கொடப்பா! இல்லாட்டா நான் நாளையிலிருந்து பள்ளிக்கூடம் போகலே.

துரை: சரி! சரி! நீயும் வந்திட்டியா! மூணு பேரும் கூண்டோட கைலாசம் போக வேண்டியது தான்.

(கோபு போகிறான்)

மங்: (எதையோ திடீரென்று நினைத்துக் கோண்டவள் போல) இந்தாங்கோ! எனக்கு ஒரு நல்ல யோசனை தோணுறது.

பையன்: தாத்தா! எங்க வீட்டில் அன்னிக்கி ஜோரான சீடை பண்ணியிருந்தா. உங்களை நினைத்துக்கொண்டோம்!

பல்போன தாத்தா: சீடைக்குப் போயா, என்னை நினைச்சிண்டே? அன்னிக்கிப் பாதாம் அல்வா பண்ணினதாகச் சொன்னாயே. அப்போ நினைச்சிக்கப்படாதோ?

துரை: அடடே! உனக்குக் கூட ஏதாவது இருக்கா என்ன, யோசனை சொல்றமாதிரி!

மங்: உங்க விளையாட்டுப் போதும்! நான் சொல்றதைக் கேளுங்கோ! நாளன்னைக்கு கோகுலாஷ்டமி இல்லையா? போய் உங்க நண்பர் ராமுடுகிட்டே முப்பது ரூபாய் கைமாற்று வாங்கிண்டு வாங்கோ. அப்புறம் நடக்கிறதைப் பாருங்களேன்!

துரை: பத்து வருஷமா என்ன நடந்துதுன்னுதான் பாத்தாச்சே! இனிமே என்ன புதுசா நடக்கப் போறது? ம்....பார்க்கலாம்.

(போகிறார்கள்)

பாத்திரங்கள்: மங்களம், அவன் தோழிகளான ஜானகி, நீலா, கமலி முதலியோர்.

காட்சி - 2

கம: எதுடீ! அபூர்வமா எங்களுக்கெல்லாம் கோகுலாஷ்டமி 'பார்டி' வைக்கறே? ம்....நீ கொடுத்து வைத்தவள்.

நீலா: சரிடீ! எங்களுக்கு நேரமாச்சு! ஆரம்பிக்கலாம்!

(பலகாரங்களை எல்லோரும் சாப்பிட ஆரம்பிக்கின்றனர்.)

ஜான: ஐயையோ! என் பல்லே போச்சுடீ! முறுக்கைக் கடித்து..ஆ......

நீலா: கமலா: (ஒரு சமயத்தில்) சீடையைக் கடித்து விழுந்த பல்லைச் சீடையோடு சேர்த்து முழுங்கிப்புட்டேண்டி; ஐயோ! என்னடீ பண்ணறது இப்போ?

மங்: ஐயையோ! முறுக்குச் சரியா வேகலே போலிருக்கு. நான்கூட ருசி பார்க்கலே இன்னும்! பல் தானே போச்சு! பரவாயில்லை. வேறே வச்சுண்டாப் போச்சு;

காட்சி - 3

மங்: (புருஷனிடம்) இந்தாங்கோ! உங்க பில்லுக்கு நூத்தைம்பது ரூபாய் பணம் வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன். இப்போதைச் செலவுக்கு ஆச்சு. நான்மட்டும் அவாளுக்குப் பார்ட்டி வைக்காமல் இருந்திருந்தால் நீங்க பாட்டுக்கு பல்லைக் குத்திண்டுதான் உட்கார்ந்திருக்கணும். நானும் 'முகாரி' தான் பாடிண்டிருக்கணும்.

துரை: அடியே! என் சமர்த்து! உனக்கு மூளையில்லேன்னு எந்த முட்டாளடீ சொன்னான்? கூப்பிடு கோபுவை! நல்லதாகச் செய்திருக்கும் முறுக்குச் சீடைகளைக் இப்படி கொண்டு வா, ஒரு கை பார்க்கலாம்!

[திரை]

தெ. இ. கதை

ஈரச் சுவர்

வி. பி. கிருஷ்ணசாமி

திருடன் ஒருவன் தன் குல வழக்கத்தின்படி, அமாவாசை அன்று இரவு ஒரு வீட்டில் கன்னம் வைத்துத் திருடப் போனான். அந்த வீட்டின் பின் பக்கத்துச் சுவர் அன்றுதான் கட்டி முடிக்கப் பட்டிருந்தது. பழைய காலத்தில் சாதாரணமாக எல்லாரும் மண் சுவர்தான் எழுப்பி வீடு கட்டிக்கொள்வார்கள். திருடன் அந்தச் சுவரில் கன்னம் வைத்தான். துவாரம் போதுமான அளவு ஆனதும் தலையை உள்ளே விட்டான். சுவர் ஈரமாக இருந்தபடியால், மேலிருந்து கீழே இறங்கி விட்டது. திருடனின் கழுத்து இறுக்கப்பட்டு அவன் உயிர் துறந்தான். வெளியில் காத்திருந்த திருடனின் மனைவி தன் கணவன் திரும்பி வராததால், உள்ளே வந்து பார்த்தாள். திருடன் இறந்து கிடப்பதைக் கண்டாள். உடனே தனக்குத் தெரிந்த சில பேர்களை அழைத்துவந்து, திருடன் உடலை வெளியே எடுத்து, அவ்வூர் அரசனிடம் சென்று முறையிட்டாள்.

''கன்னம் வைப்பதுண்டு, களவும் ஆடுவதுண்டு, ஈரச் சுவரை வைத்து இறுத்திக் கொல்வாருண்டோ, அரசனே? என் புருஷன் எங்கள் தொழில் பிரகாரம் திருடப் போனான். அந்த வீட்டுக்காரன் ஈரச் சுவரை வைத்து என் புருஷனைக் கொன்றுவிட்டானே! என்னை யார் இனிமேல் காப்பாற்றுவார்கள்?'' என்று கதறினாள்.

அந்த மதிகெட்ட மன்னனுக்கு எது நியாயம் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த வீட்டுக்காரனை அழைத்துவர உத்தரவிட்டான். சேவகர்கள் அவனை அழைத்து வந்தார்கள். அரசன், ''ஏனையா, ஈரச் சுவரை வைத்து இவள் புருஷனை இறுத்திக் கொன்று விட்டாயே! இதற்கு என்ன சமாதானம் சொல்கிறாய்?'' என்று கேட்டான். அவன் நடுங்கிக்கொண்டே, ''அரசே, ஈரச் சுவர் வைத்த கொத்தன் மீது அல்லவா குற்றம் இருக்கிறது! நான் என்ன செய்வேன், அரசே?'' என்றான். அரசன், ''இவன் சொல்வது நியாயந்தான். கொண்டுவா அந்தக் கொத்தனை'' என்றான். கொத்தன் வந்ததும் பயந்து, ''சுவாமி, மண் பிசைந்து கொடுத்த சிற்றாள்மேல் தான் குற்றம் உள்ளது. அவன் அதிகமாகத் தண்ணீர் விட்டு மண்ணைப் பிசைந்துவிட்டான்'' என்றான். அரசனுக்கு அவன் சொல்வதும் நியாயம் என்றே பட்டது. பிறகு சேவகர்கள் அந்தப் பையனை இழுத்து வந்தார்கள். பையன், ''சுவாமி, இவ்வளவு மண்ணுக்கு இவ்வளவு தோண்டி தண்ணீர் விட்டுப் பிசைவது என்று கணக்கு உண்டு. நான் அந்தப்படியே பிசைந்தேன். தோண்டி கொஞ்சம் பெரியதாகப் போய்விட்டதோ என்னவோ. அதற்கு நான் என்ன செய்ய முடியும்? குயவன் மீது அல்லவா குற்றம்?'' என்றான். பிறகு குயவன் சபைக்கு அழைத்து வரப் பட்டான். அவன், ''சுவாமி, நான் மண் பாண்டம் செய்து கொண்டிருக்கையில், ஒரு தாசி வீதி வழியே நடந்துபோனாள். அவள் அழகைப் பார்த்துக்கொண்டே செய்தேன். கொஞ்சம் பெரிதாகப் போய் விட்டது. குற்றம் தாசியின் பேரில் அல்லவா இருக்கிறது?'' என்றான். அரசன், ''இவன் சொல்வதும் நியாயம்தான், கொண்டுவா அந்தத் தாசியை!'' என்றான். தாசி வந்தாள். ''அரசனே, வண்ணான் ஒழுங்காகப் புடைவைகளை வெளுத்துக் கொடுக்கவில்லை. அவனைத் தேடித் துறைக்குப் போக வேண்டியிருந்தது. நான் என்ன செய்வேன்?'' என்றாள்.



பிறகு வண்ணான் வந்ததும், ''சுவாமி, நான் துணி வெளுக்கும் கல்லின்மேல் ஒரு சாமியார் உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டிருந்தார். என்ன சொன்னாலும் எழுந்து போகவில்லை. நான் எப்படித் துணி துவைப்பது? சாமியார் பேரில் அல்லவா குற்றம்?'' என்றான். அரசன் அந்தத் துறவியை அழைத்துவரக் கட்டளையிட்டான். அவர் மௌனமாக இருந்தார். அரசன், ''குற்றம் இருப்பதால்தான் சும்மா வாய் மூடி நிற்கிறான். இவனைக் கொண்டு போய்க் கழுவிலேற்றி விடுங்கள்!'' என்று உத்தரவிட்டான். மன்னனின் முட்டாள் தனத்தை அறிந்த அந்தத் துறவி வேறு யார் மீதும் குற்றத்தைச் சுமத்த விரும்பவில்லை. மற்றவர்களுக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்தார்.

உயிரோவியம்

ஜே. எம். சாலி

சாந்தாவின் முகம் கூம்பியிருந்தது. கண்கள் கலங்கியிருந்தன. அப்பாவின் அறையினுள் நுழைந்தாள்.

சிந்தனையிலிருந்து கலைந்த அவர், ''என்னம்மா சாந்தா. ஏன் இப்படியிருக்கிறாய்?'' என்று பரிவோடு கேட்டார். அவரது அருமை மகளல்லவா, அவள்!

''நடந்ததைச் சொல்லம்மா. உடம்புக்கு என்ன?......''

அவள் விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். பெருகிய கண்ணீரைக் கண்ட அவர் பரபரப்படைந்தார்.

''சாந்தா, நீ ஏன் அழவேண்டும்? விஷயத்தைச் சொல்லேன்!'' என்று கேட்டுக்கொண்டே கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டார்.

''சந்திரன் என்னைக் கண்டபடியெல்லாம் பேசினான், அப்பா! அவன் ஒரு சித்திரம் வரைந்திருக்கிறான். அந்த அழகுச் சித்திரத்தை

எனக்குக் கொடுக்கும்படி கேட்டேன். எவ்வளவு அருமையானது தெரியுமா? கேட்டவுடனேயே ஆத்திரத்தோடு, 'தரமுடியாது போ' என்று சொல்லிவிட்டானப்பா.'' நெஞ்சடைக்கப் பதில் சொன்னுள் சாந்தா.

''சே, இதுக்காகவா இப்படி வருத்தப்படறே! நாளைக்கு நான் தான் பட்டணம் போகப் போறேனே....ஒரு படம் என்ன, டஜன் கணக்கில் வாங்கி வரேம்மா. கண்ணைக் கவரும் மாதிரிதானே வேணும்? நான் பார்த்துக்கறேன்.''

''எனக்கு அதெல்லாம் தேவையில்லை. அழகும் கருத்தும் நிறைந்த சந்திரனின் அந்த ஓவியந்தான் வேண்டும், அப்பா. அதை எதற்கோ போட்டிக்கு அனுப்பப் போகிருனும்...... எப்படியாவது எனக்கு வாங்கிக் கொடுத்துவிடுங்கள். இது உங்களால் செய்ய முடியாதா, அப்பா?''

''சாந்தா, நீ ஏன் இப்படி வம்பு பண்றே? அவன் வரைந்தான்; அதை என்ன வேண்டுமானுலும் செய்வான். உனக்கு அதில் என்ன இருக்கிறது? சந்திரன் கொடுக்க மறுத்தது நியாயந்தானே! நல்ல படங்களை உனக்கு நான் வாங்கி வருகிறேன்.''

''அது எனக்கும் தெரியும், அப்பா. இந்தப் பேச்சைக் கேட்கத்தான் உங்களிடம் வந்தேனு? நான் ஆசையாகக் கேட்கும் அந்தப் படம் எனக்குக் கிடைக்கவே கிடைக்காதா?'' அவள் முகம் சிவந்தது.

அன்பு மகளின் ஆசையை, அருமை அப்பாவால் நிறைவேற்றக்கூடவா முடியாது! ''சாந்தா, நீ போம்மா. நம்ம கணக்குப்பிள்ளை வந்தவுடன் சொல்லியனுப்புகிறேன். அவர் சொன்னுல் சந்திரன் படத்தைக் கொடுத்துவிடுவான். சாயங்காலம் உனக்கு அது கிடைத்துவிடும். உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதே!'' என்று தேற்றினுர் அப்பா வேதாசலம்.

* * *

கையில் தூரிகையோடு அமைதியாக வேலையில் ஈடுபட்டிருந்தான் சந்திரன். நல்ல அடக்கமும் அழகும் பொருந்திய அவனுக்கு வயது பதினறு இருக்கும். இளம் கலைஞன். அவன் சித்திரப் பழக்கத்தில் ஊக்கம் கொண்ட விதமே தனி. பள்ளிப் பொருள்காட்சியில் அவன் சித்திரம் இடம் பெற்றிருந்தது. நல்ல கருத்தும் கலையழகும் பெற்றிருந்த அவன் ஓவியத்திற்கே முதல் பரிசு கிடைத்தது. அவன் திறமையைப் போற்றிப் பலர் புகழ்ந்தனர். அதிலிருந்து அவன் ஊக்கமும் வளர்ந்தது.

''சந்திரா!'' என்று அழைத்த வண்ணம் உள்ளே வந்தார் அவன் அப்பா. அவர்தான் வேதாசலத்தின் கணக்குப்பிள்ளை.

''என்ன, அப்பா?''—சந்திரன் ஆவலோடு கேட்டான்.

''உனக்கு வேறு வேலையில்லையா? இப்படி 'சித்திரம் சித்திரம்' என்று உயிரை விட்டுக்கொண்டிருந்தால் எதற்காகும்? எனக்குக் கொஞ்சங்கூட இது பிடிக்கவில்லை. படிப்புதான் முடிந்தது; ஏதாவது வேலை பார்க்கலாம் அல்லவா?''

''என்ன அப்பா, இப்படி?....''

''சரி போகட்டும். ஏதோ ஒரு படம் போட்டிருக்கிருயாமே.... அந்தப் படத்தை முதலாளி கேட்டார். அவர் பெண் சாந்தா அழுதுகொண்டு இருக்கிருள். பாவம், சின்னப் பெண்தானே!''

''அதற்கு என்ன செய்யச் சொல்கிறீர்கள், அப்பா?''

''படத்தை வாங்கிக்கொண்டு வரேன்னு சொல்லி வந்திருக்கிறேன். அவர் ரொம்பச் சொல்லியிருக்கிருர். கொடுத்துவிடலாம் அல்லவா?''

''முடியாது.''

''முடியாதா! ஏன்?''

''அது என் உயிர்.''

''உயிராவது, மண்ணுவது; அவர் கேட்கிருர், கொடுக்க மறுப்பதா?....''

''யாராயிருந்தால் என்ன? அவர் உங்கள் முதலாளி; நீங்கள் நன்றி செய்ய வேண்டியவர். நான் என்ன செய்யமுடியும், அப்பா? அந்த ஓவியம் அவருக்குக் கிடைக்காது.''

''என்ன சந்திரா, இப்படிப் பேசுகிருய்? அந்தப் படத்தினுல்

உனக்கு என்ன ஆகிவிடப் போகிறது?''

''இந்த ஓவியம்தான் எனக்கு வழி காட்டி! என்னை இதுதான் உயர்த்தப் போகிறது. இதை நான் சொல்லவில்லை; ஆசிரியரே சொன்னார் அப்பா. கலை உலகம் என்னை ஏற்றுக்கொள்ளும். நாளைக்கே சித்திரத்தைப் போட்டிக்கு அனுப்பப்போகிறேன். என்னைத் தேடிவரும் வேலை. இதை இழந்துவிட்டால்....

''அப்பா, உங்கள் முதலாளி தம் பெண்ணின் ஆசையை நிறைவேற்ற எவ்வளவு கஷ்டப்படுகிறார்...... எனக்காக நீங்கள் இதையா செய்வது?..''

சந்திரனின் போக்கு அவருக்குக் கொஞ்சம் புரிந்தது. அவன் சொன்னவை அனைத்தும் உண்மை. கலைக்கனவில் ஆழ்ந்து அந்த ஓவியத்தைக் கண்டெடுக்க எவ்வளவு கஷ்டப்பட்டானே! 'மகன் கலைஞன்! யாருக்குப் பெருமை?' அவருக்கு உண்மை விளங்கியது.

* * *

''அப்பா, படம் வந்து விட்டதா? சந்திரன் கொடுத்திருப்பானே! எங்கே அப்பா, அது?'' ஆவலோடு கேட்டுக்கொண்டு வந்தாள் சாந்தா.

''கொடுக்க மறுத்துவிட்டான், கோவேறுக் கழுதை! ஆணவம்

பிடித்துவிட்டது அற்பனுக்கு! என் சாந்தாவுக்கு அந்த ஓவியம் இல்லை! என் கணக்குப்பிள்ளை மகன் என்னையே அவமதித்துவிட்டான். நன்றிகெட்டவன்; பித்தம் பிடித்தப் பேயன்!'' வேதாசலம் ஏதேதோ பேசினார். ஆத்திரம் பொங்கி வழிந்தது.

''அப்படி என்றால், அது கிடைக்காதா அப்பா? என்ன செய்வது?'' என்று தொண்டையடைக்கக் கேட்டாள் சாந்தா.

''நீ சும்மா இரும்மா. எல்லாம் எனக்குத் தெரியும். கணக்குப் பிள்ளைகூட இந்த வேலையைச் செய்யவில்லை!''

'சாந்தா மனம் வாடுவதுபோல் சந்திரன் வருந்த வேண்டும். அவன் எண்ணம் அடியோடு கெட வேண்டும்.' வேதாசலத்தின் மனம் கல்லாக மாறியிருந்தது. தீவிரமான யோசனையில் ஆழ்ந்தார்.

* * *

இரவு பன்னிரண்டு மணி இருக்கும். எங்கும் மையிருட்டு. அமைதியைக் கலைக்க விரும்பி ஆந்தை அலறிக்கொண்டிருந்தது பயங்கரமாகத்தான் இருந்தது. எங்கோ ஒரு நாய் குரைத்துக்கொண்டிருந்தது. வௌவால்களின் 'கிரீச்' ஒலி. இவற்றைத் தவிர வேறு எந்த சந்தடியும் இல்லை.

அந்த நேரத்தில் தெருவில் நடந்துகொண்டிருந்தது ஓர் உருவம். சந்திரனின் வீட்டை நெருங்கிவிட்டது அது. எப்படியோ வீட்டினுள் நுழைந்தும்விட்டது. பூனைபோல் ஓசை செய்யாமல் எதையோ துருவித் துருவிப் பார்த்துக்கொண்டிருந்தது.

அருகேயிருந்த பெட்டி அதன் கண்களுக்குச் சட்டெனத் தெரிந்துவிட்டது. அவசரமாக அதைத் திறந்தது.

அடுத்த கணம்—

நாலைந்து ஓவியம் தீட்டப்பட்ட காகிதங்கள் அவன் கையில் சிக்கிக்கொண்டன! வெற்றிப் பெருமிதத்தால் அதன் முகத்தில் ஒரு களிப்பு ஏற்பட்டது.

ஆனால்—

மறு நிமிஷம் அதைப் பற்றின, இரும்புக் கரங்கள்! விழித்தது அது; பிடித்தவன் சிரித்தான்.

''தம்பி, சந்திரா, திருடன்.... திருடன்....சீக்கிரம் விளக்கைக் கொண்டுவா'' என்றான் பிடித்தவன்.

''இதோ வந்து விட்டேன், மாமா'' என்று சொல்லிக்கொண்டே வந்தான் சந்திரன். ஒரு விந்தை! திருடனைப் பிடித்திருப்பவன் யார்? எங்கே வந்தான்?

சந்திரன் மாமா என்று அழைத்தானே, அந்தப் போலீஸ் கான்ஸ்டபிள், அவன் மாமா கண்ணப்பா தான். ஹெட்கான்ஸ்டபிளாக அவனுக்கு வேலை மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. 'டியூட்டி'யை வேறு ஊருக்கு மாற்றியிருப்பதால் சொல்லிக்கொண்டு போக அன்று மாலைதான் வந்திருந்தான். வந்த நேரம் பார்த்து இந்த வேலை நடந்துவிட்டது.

சந்திரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன்னுடைய சித்திரங்கள் திருடன் கையில்!.. வேதாசலத்தின் ஆள் சோமு அல்லவா அவன்?

''யாரடா நீ? திருட்டு ராஸ்கல்! கொள்ளையடிக்கவா வந்தாய்?'' என்று கத்தினான் கண்ணப்பா.

அந்தத் திருடன் - சோமு - பதறிப் போய்விட்டான். வேர்த்துக்கொட்டியது. ஆள் ஆட்டங் கண்டுவிட்டான்.

அவன் திருட வந்த காரியம் கண்ணப்பாவுக்கும் தெரிந்தது.

''அப்படியா, செய்தி? எல்லாம் வேதாசலத்தின் வேலைதானா? பார்த்துக் கொள்கிறேன்'' என்று சவால் விட்டான் கண்ணப்பா.

* * *

சோமு கையும் களவுமாக, கான்ஸ்டபிளிடம் மாட்டிக் கொண்டதால் வேதாசலத்திற்குப் பயம் தாங்க முடியவில்லை. 'தனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் என்ன செய்வது? தன்னால் தானே சோமு திருடப் போனான்?'' என்றுதான் பயம்.

"என்ன மிஸ்டர், வேதாசலம். எப்படி வேலை நடந்திருக்கிறது பார்த்தீங்களா?" வெற்றிச் சிரிப்பொன்றை உதிர்த்தவாறு கேட்டான் கண்ணப்பா.

"இல்லை, சார்; ஏதோ தெரியாமல் நடந்துவிட்டது. அறிவு கெட்டத்தனமா செய்துட்டோம்" என்று நாக்குழறப் பேசினார் வேதாசலம்.

"இதிலே என்ன மிஸ்டர் இருக்கு? முதல்லே சோமுவை ஸ்டேஷனுக்கு அனுப்புகிறேன். அப்புறம் நீங்கள்...."

வேதாசலத்தின் கண்கள் ஒளியிழந்தன. விழிக்கடையில் கண்ணீர் அரும்பி நின்றது. பார்க்கப் பரிதாபமாக இருந்தது அவர் நிலை.

சந்திரனின் மனம் நெகிழ்ந்தது. அவன் பிஞ்சு உள்ளம் அவரைப் பார்க்கப் பொறுக்கவில்லை. பகைவனுக்கு அருளுவதுதானே பண்பு?

"மாமா, போதும்! அவரை ஒன்றும் செய்யாதீங்க. அவர் மனமறிந்து செய்யவில்லை. சாந்தாவின் மேல் அவருக்கு அவ்வளவு அன்பு. பாசம்தான் அவரை.." சந்திரன் விளக்கினான்.

"என்ன சந்திரா, ஒன்றும் அறியாதவன் போல் சொல்கிறாயே! என் கடமையை நான் செய்ய வேண்டாமா?"

"மன்னிக்கும் மனப்பான்மை வேண்டாமா, மாமா? அவர் தவற்றைத் திருத்திக்கொண்டு விட்டார்; அதற்கு மேல் என்ன செய்ய விருக்கிறது?"

கண்ணப்பா சிந்தித்தான். சந்திரன் சொல்லியது நியாயமாகவே பட்டது. கடமையென்றாலும் நேர்மையையும் நியாயத்தையும் பார்க்கத்தானே வேண்டியிருக்கிறது?

"சந்திரா, நான் ஒன்றும் செய்யத் துணியவில்லை" நிதானமாகக் கூறினான் கண்ணப்பா.

"சந்தர், உனக்கு நான் பாதகம் செய்துவிட்டேன். உன் வெள்ளை மனம் என்னை மாற்றிவிட்டது. உன்னிடம் மன்னிப்புத்தான் கோரவேண்டும்." மனமாற்ற மடைந்த வேதாசலம் பேசினார்.

"ஆமாம் சந்தர்; என்னால்தான் இவ்வளவும் நடந்துவிட்டது. அந்த உயிரோவியத்தை நான் இனிக் கேட்கவே மாட்டேன், சந்தர்" என்று குழைவோடு சொன்னாள் சாந்தா.

அமைதி நிலவியது. அந்த உயிரோவியம் எவ்வளவு பெரிய வேலையைச் செய்துவிட்டது. நீண்ட பெருமூச்சொன்றை விட்டவாறு நடந்தான் சந்திரன்.

உங்களால் முடியுமா? விடை







புலிகுட்டி



தம்பி! ஈட்டியை எறிந்தால் குறி தவறக்கூடாது!
பெரு விழியா! எங்கே, நீயும் வாளை எடுத்துக் கொண்டு வா, பார்ப்போம்!
சபாஷ்!


தம்பி, புலிக்குட்டி!
இந்த மூன்று பேரும் இனி
நம் கூட்டத்துக்குத் தள
பதிகளாக இருப்பார்கள்!
புலிக்குட்டிக்கு வயது பன்னிரண்டு ஆகிறது......

(தொடரும்.)

தந்தை பாவே வருகிருர்

வி. ஆர். ராதாகிருஷ்ணன்

'தந்தை பாவே வருகிருர்.
தாயாம் பூமி என்கிருர்'' என்று சில தொண்டர்கள் பாடிக் கொண்டு போனதைக் கேட்ட கோபு, உள்ளே ஓடி, தகப்பனுரை வாசலுக்கு இழுத்துக்கொண்டு வந்தான். ''யார் அப்பா, பாவே?'' என்று கேட்டான் கோபு. அவ்வப் போது பத்திரிகைகளில் வருகின்ற செய்தியைப் படித்து, பாவேயைப் பற்றி ஏதோ கொஞ்சம் தெரிந்து கொண்டிருந்த அவன் தந்தை, ''மகாத்மா காந்தியைப்போல ஒரு மகான். காந்திஜியின் சீடர். தமிழ் நாட்டிற்கு வந்திருக்கிருராம்'' என்று கூறினுர்.

ஆனுல் கோபு விடுவதாக இல்லை ' அவர் எந்த ஊர்? ஏன் வருகிருர்? அவர் என்ன சொல்கிருர்?'' என்று கேள்விக்குமேல் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனுன்.

அதற்குள்ளாக, பூமிதான இயக்கத் தொண்டர் ஒருவர் கோபுவின் வீட்டிற்கு வந்தார். கோபு தந்தையிடம் கேட்ட கேள்விகளை, அந்தத் தொண்டரிடத்திலும் கேட்டான். அந்தத் தொண்டர் பாவேயின் வாழ்க்கையைப்பற்றிச் சொல்லலானுர்.

''காற்றையும் நீரையும் படைத்தது யார்?'' என்று கேட்டார் அந்தத் தொண்டர்.

கோபுவுக்கா தெரியாது, பதில் சொல்ல! ''ஆண்டவன் படைத்தார்' என்ருன்.

''இந்த நிலத்தைப் படைத்தது யார்?'' எனக் கேட்டார் தொண்டர்.

''ஆண்டவன்தான்! அதிலென்ன சந்தேகம்?'' என்ருன் கோபு.

''காற்றும் நீரும் யாருக்கும் எப்படிச் சொந்தமில்லையோ, அதைப் போலவே பூமியும் எவருக்கும் சொந்தமில்லை. அதுதான் தர்மம், நியாயம், நீதி. இந்த உண்மையைத்தான் கூறிவருகிருர் விஞேபா.



இம்முயற்சியில் அவர் வெற்றியும் பெற்றுவிட்டார்'' என்ருர் ஊழியர்.

''அப்படியா? இது பெரிய விஷயம். அவரைப்பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்ருர் கோபுவின் தந்தையும். தொண்டர் சொல்லத் தொடங்கினுர்.

வீர சிவாஜி பிறந்த மகாராஷ்டிர மாகாணத்திலே காகோடு என்ற கிராமத்தில் 1894-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி விஞேபா பாவே பிறந்தார். அவர் தந்தையின் பெயர் நரஹரி பாவே. தாயார் பெயர் ருக்மிணி தேவி. அவருக்குப் பெற்றேர்கள் இட்ட பெயர் விநாயக் பாவே.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே அவர் மிகவும் கெட்டிக்காரராக இருந்தார். வகுப்பில் அவர் தான் முதல் மாணவர். அவரது தாய்ப் பாஷையான மராட்டியில்

வாங்க வந்தவர்: உங்க கடையிலே சாயம் போகாத துணியே கிடையாதா, ஐயா?

கடைக்காரர்: ஓ இருக்கே!.. அடே பையா, இருக்கிற வெள்ளைத்துணியை எல்லாம் எடுத்துப் போடுடா, ஐயாவுக்கு!

P. கலாசாமி.

நூற்றுக்கு நூறு மார்க்குகள் வாங்குவாராம். நூறு மார்க்கு கொடுக்கக் கூடாது என்று 99 மார்க்கு கொடுப்பார்களாம் அவரது ஆசிரியர்கள். இப்பொழுது இவர் பல பாஷைகளில் பாண்டித்தியம் பெற்றிருக்கிறார். இவருக்கு இருபத்தொரு (21) பாஷைகள் தெரியும் என்று சொல்கிறார்கள். சம்ஸ்கிருதத்தில் மேதை அவர் ஹிந்தியிலேயே பேச விரும்புகிறார். தமிழ்கூடப் படித்து வருகிறார். தமிழில் பேசினால் புரிந்து கொள்வார்; ஓரளவு பதிலும் சொல்வார்.

சிறு வயதில் அவரது தாயார் பக்தி விஷயமான கதைகளை எல்லாம் சொல்லி, பாவேயைத் தெய்வபக்தியில் ஈடுபடும்படிச் செய்து வந்தார். ஒரு சமயம் பக்த விஜயம் படித்துக்கொண்டிருந்த போது, "அம்மா, இம்மாதிரியான மகான்களை எல்லாம் தற்காலத்தில் காணமுடியாதா?" என்று வினவினார் பாவே.

"முற்காலத்தில்தான் அம்மாதிரி மகான்கள் இருந்தார்கள். இப்பொழுது இருப்பது அரிது" என்று அன்னை பதிலளித்தாள். "இப்படிப்பட்ட மகாபுருஷர்கள் இல்லாமல் உலகமே இயங்க முடியாது" என்று, இன்று மகா புருஷராக விளங்கும் வினோபா தம் தாயாருக்குப் பதிலளித்தார்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே மாணவர் சங்கம் ஒன்றை ஸ்தாபித்து அதில் அடிக்கடி அவர் பேசுவதுண்டு. இத்தாலிய தேச பக்தர் மாஜினியின் வீர மொழிகளை மேற்கோள் காட்டிப் பேசுவாராம். ஆனால் அன்றிருந்த வீரம் இப்போது மறைந்து ஞானம் மேலோங்கி நிற்கிறது. ஆதி சங்கரரின் அறிவும் புத்தரின் கருணையும் ஒருங்கே பெற்ற உத்தமராக விளங்குகிறார்.

ஒரு நாள் கல்லூரி சர்டிபிகேட்டுகளை நெருப்பிலிட்டுக் கொளுத்தினார் வினோபா. அதைக் கண்ட அவரது தாயார் திடுக்கிட்டு, "இது என்ன அநியாயம்? ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று பதற்றத்துடன் கேட்டார்.

'இவைகளெல்லாம் எதற்கு அம்மா? வேலைக்குச் செல்கிறவர்களுக்குத்தானே இவை தேவை? நான் கல்லூரிப் படிப்பை விட்டுவிட்டு மக்களுக்குச் சேவை செய்யப் போகிறேன்" எனப் பதிலளித்தார் அவர்.

கல்லூரிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, காந்திஜியின் சபர்மதி ஆசிரமத்தை அடைந்தார். ஆசிரமத்தில் எல்லா வேலைகளையும் தாமாகவே செய்வார். தோட்டி வேலை, சமையல் வேலை ஆகிய எல்லா வேலைகளையும் ஆண்டவன் வேலையே என்று சொல்லியதுடன் செயலிலும் செய்து காட்டினார். காந்திஜி தான் இவருக்கு வினோபா பாவே எனப் பெயர் சூட்டினர்,

விநோபாவுடன் ஒரு சமயம் பல மணி நேரம், நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருந்தார் காந்திஜி. விநோபாவைப் பார்த்தால் ஏதோ 'பித்துக்குளி' மாதிரி இருப்பார். மகாத்மாவின் நேரத்தை இந்தப் பித்துக்குளி மனிதன் வீணாக்குவதாக காந்திஜியைப் பாாக்க வந்த தீனபந்து ஆண்ட்ரூஸ் நினைத்தார். தீனபந்து ஆண்ட்ரூஸ் ஆங்கிலேயர். காந்திஜிக்கு மிகவும் வேண்டியவர். விநோபா பேசிவிட்டுச் சென்ற பிறகு அவர், ''இவர் யார்?'' என்று மகாத்மாவிடம் கேட்டார். அதற்குக் காந்திஜி, ''இந்த ஆசிரமத்திற்குப் பலர் ஆசி பெற வருகிறார்கள். ஆனால் இப்பொழுது என்னிடம் பேசிவிட்டுப் போனாரே விநோபா, இவர், இந்த ஆசிரமத்திற்கு ஆசி அளிப்பதற்கு வந்திருக்கிறார்'' என்றார். விநோபாவிடத்தில் காந்திஜிக்கு இருந்த மதிப்பிற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

நாகபுரியில் 1923-ஆம் ஆண்டில் தேசியக் கொடியைப் பிடித்துக் கொண்டு, ஒருவரும் செல்லக் கூடாது என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் விதித்த தடையை எதிர்த்து, சத்தியாக்கிரப் போரில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார் விநோபா குருவாயூரில் ஹரிஜன ஆலயப் பிரவேச இயக்கத்திற்கும் தலைமை தாங்கினர்.

1940-ஆம் ஆண்டில் தனி நபர் சத்யாக்கிரகத்தைத் துவக்குவதற்குச் சரியான சத்யாக்கிரகியாக மகாத்மா விநோபாவைத்தான் தேர்ந்தெடுத்தார். அப்பொழுதுதான் விநோபாவை உலகம் அறிந்தது.

சத்யாக்கிரக நெறியின் தத்துவங்களை நன்கு உணர்ந்து அன்றாட வாழ்க்கையிலும் கடைப்பிடிக்கும் விநோபா, ஆடம்பரங்களையும் வரவேற்புகளையும் என்றுமே விரும்புவதில்லை.

''இன்று காந்தி உயிருடன் இருந்தால் நான் என்னுடைய ஆசிரமத்திலேயே நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருப்பேன். இவ்விதம் நாடெங்கும் பிரசாரம் செய்ய முனைந்திருக்கமாட்டேன்'' என்று சொல்கிறார் விநோபா. அவ்வளவு அடக்கம் மிகுந்தவர் இவர்.

இந்தியா சுதந்தர மடைவதற்கு அஹிம்சை வழி முறைகளை எப்படிப் பயன் படுத்துவது என்பதைக் காந்திஜி கற்றுத் தந்தார். காந்திஜி காலமான பிறகு அஹிம்சை முறையைச் சுதந்தர இந்தியாவின் முன்னேற்றத்திற்கு எப்படிப் பயன் படுத்துவது என்பதுபற்றித் தீவிரமாக விநோபா சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில்தான், ஹைதராபாத்தில் தெலுங்கானாவில் கம்யூனிஸ்டுகள் பெரும் கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். விவசாயிகளின் நிலப்பசியைத் தீர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு பயங்கரமான பலாத்காரச் செயல்களில் அவர்கள் ஈடுபட்டார்கள். கம்யூனிஸ்டுகளின் கிளர்ச்சியை அடக்க ராணுவமும் போலீசும் கெடுபிடி ஆட்சி நடத்தின. பாமர மக்களின் பாடு திண்டாட்டமாகிவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் விநோபா தெலிங்கானாவுக்கு வந்தார். வங்காளத்தில் நவகாளியிலே ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை ஸ்தாபிப்பதற்காகக் கலவரம் மிகுந்த பிரதேசத்தில் காந்திஜி காலால் நடந்து சென்று எப்படி அமைதியை நிலை நாட்டினாரோ அதே மாதிரியாக, காந்தியின் சீடரான விநோபாவும் தெலுங்கானாவில் கிராமம் கிராமமாகச் சென்று அமைதியை நிலை நாட்டினார்.

இந்த அஹிம்சை யாத்திரையின் நடுவேதான் போச்சம்பள்ளி என்ற கிராமத்தில் ஹரிஜனங்கள் தங்களுக்கு நிலம் வேண்டுமென்று விநோபாவைக் கேட்டார்கள். அங்கு மாலையில் நடந்த கூட்டத்தில், ''நிலம் படைத்தவர்கள் உழவர்களுக்கு நிலம் தாருங்கள்'' என்று கேட்டார். அந்தக் கிராம மிராசுதார் ராமசந்திரா ரெட்டியார் என்பவர் 100 ஏகர் நிலங்களை

உடனே எழுதிக் கொடுத்தார். இந்தச் சம்பவம் நடந்தது 1951-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 18-ஆம் தேதியாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை பாவே இந்தியா முழுவதும் நடந்தே வருகிறார். "ஏழை, அடிமை எவரும் இனி நாட்டில் இல்லை. எல்லாரும் உழைத்து வாழவேண்டும்" என்று கிராமம் கிராமமாகச் சொல்லி வருகிறார். ஏழை மக்கள் உழைத்து வாழ லக்ஷக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கிக் கொடுக்கிறார். அவரது உபதேசமொழிகளை நூற்றுக் கணக்கான ஊழியர்கள் கிராமம் கிராமமாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். அந்தப் புனித புருஷர் மே மாதத்திலிருந்து தமிழகத்தில் யாத்திரை செய்து வருகிறார்.

பூமிதான ஊழியர் இவ்விதம் சொன்னதைக் கேட்ட பிறகு, "மகாத்மா காந்தியைப் போன்ற மற்றொரு மகானைக் காணப்போகும் நாமும் பாக்கியசாலிகளே" என்றார் கோபுவின் தந்தை.

"நம்மிடம் நிலம் இல்லையே அவருக்குத் கொடுப்பதற்கு - நாம் என்ன செய்யலாம்?" எனக் கேட்டான் கோபு.

"தம்பி! நீ நூற்ற நூலைக்கூட அவருக்குக் காணிக்கையாகக் கொடுக்கலாம்" என்றார் ஊழியர்.

"அப்படியா, எனக்குப் பள்ளிக்கூடத்தில் நூற்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். தினமும் நூல் நூற்று, குறைந்த பட்சம் மாதம் ஒரு சிட்டமாவது நான் காணிக்கை செலுத்தி, பூதானத்தில் என் பங்கையும் கொடுப்பேன்" என்று உற்சாகத்துடன் கூறினான் கோபு.

"என் சம்பளத்தில் ஒரு நாள் பணத்தை நானும் சம்பத் தானமாகக் கொடுக்கிறேன்" என்றார் கோபுவின் தந்தை.

விமரிசனம்

(1) புத்தர் ஜாதகக் கதைகள் (2) சிற்பி மாயன் (3) மறைந்து போன கொழும்புக் கதைகள் (4) நல்ல பாம்பு; எழுதியவர்: ராஜம்; வெளியிட்டவர்கள்; ராஜம் பப்ளிகேஷன்ஸ், சென்னை-1; விலை ஒவ்வொன்றும் பன்னிரண்டணா.

புத்தர் ஜாதகக் கதைகள் கௌதம புத்தரின் பூர்வ ஜன்மங்களைப் பற்றிய கதைகள். கௌதம புத்தர் ஒவ்வொரு பிறவியிலும் பிறருக்குத் தம்மாலான உதவியைச் செய்து மேலான நிலையை அடைந்திருக்கிறார். அவருடைய பல பிறவிகளைப் பற்றிய ஏழு அருமையான கதைகள் இதில் உள்ளன.

ஆசிரியர் அம்புலிமாமாவில் எழுதிய இரண்டு கதைகளைச் செப்பனிட்டுப் புத்தகமாகக் கொண்டு வந்திருக்கிறார். தங்க ரதம் என்ற மூன்றாவது கதை புதிது, முதல் கதை ராஜா ராணி கதைதான். ஆனால் படிக்கச் சுவாரஸ்யமாக இருக்கிறது. சிற்பி மாயனுடைய கதை சிறப்பாக இருக்கிறது. இரண்டாவது கதை சரித்திரக் கதை; இளவரசன் ஸலீமின் கதை, அழகி அனார்க்கலியை உயிரோடு சமாதி வைக்கும் கட்டம் உருக்கமாக இருக்கிறது. மூன்றாவது ராட்சஸன கதை, கட்டை வெட்டியின் சாகஸம் பிரமிப்பாக இருக்கிறது.

அடுத்ததாக மறைந்துபோன கொழும்புக் கதைகள் என்பது ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நாடோடியாக உலவிவந்த கதைகளின் தொகுப்பு, இதில் ஐந்து கதைகள் இருக்கின்றன. எல்லாம் படிக்க நன்றாக இருக்கின்றன.

நல்லபாம்பின் இயல்புகளை விளக்கும் சுவையான கதை நல்லபாம்பு. குழந்தைகள் விரும்பிப் படிக்கும் கதை.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

வெளி வந்துவிட்டன!

'நீலம்' எழுதிய

அ... ச் சங்கு

அராபியக் கதையைத் தழுவிய சித்திரக் கதை

பாரஸீக ரோஜா

விலை 5 அணு

இரண்டும் தபாலில் வேண்டுவோர் 15 அணு மணியார்டர் செய்யவேண்டும்

கண்ணன் கழக அங்கத்தினர்கள் 13 அணு அனுப்பினுல் போதும்

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.

பேனு நண்பர்கள்

1. V. நாராயணன், C/o S. வைத்தியநாதன், மாமா ரோடு, தரம்பேட், நாகபுரி.

2. K. ஸ்ரீநிவாஸன், C/o S. R. கிருஷ்ணன், அஸிஸ்டெண்ட், ஓரியண்டல் லைப் ஆபீஸ், ஸ்டேஷன் ரோடு, நாகபுரி.

3. S. ராமசந்திரன், மாணவன், வடக்கு ராஜவீதி, நங்கவள்ளி அஞ்சல், சேலம் ஜில்லா.

4. N. R. சம்பத், 314, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1

5. M. ரமேஷ் கினி, 315. தம்புச்செட்டித் தெரு, சென்னை-1

6. K. இன்பசாகரன், 33 வெற்றிஞானியார் தெரு, சிவகாசி.

7. R. வரதராஜன், போ. ஆ. தெரு, கொத்தமங்கலம் போஸ்டு, ராமநாதபுரம் ஜில்லா.

8. M. S. திருமூர்த்தி, 58-B சரவணபெருமாள் முதலித் தெரு புரசைவாக்கம், சென்னை-7.

9. C. ராமசுவாமி, 67, லட்சுமிபுர அக்கிரஹாரம், காரைக்குடி.

10. M. செல்லையா, 43, திரிகோணமலை வீதி, கண்டி, இலங்கை.

(Regd. as a News Paper in Ceylon) Reg. No. M. 55

கண்ணன் சித்திரப் போட்டி

கண்ணன் பத்திரிகையில் உங்களுக்காகப் புதிய சித்திரப் போட்டி ஒன்றை வெளியிடுகிறோம். கதை, கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்ட உங்களுக்கு இந்தப் போட்டி மிகவும் மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறோம்,

இந்தப் போட்டியில்—

- ★ ஐந்து வயது முதல் பதினாறு வயதுவரையுள்ளவர்கள்தான் கலந்துகொள்ளலாம்.
- ★ படங்கள் அனுப்புபவர்கள் கண்ணன் சற்க கூப்பனைப் பூர்த்திசெய்து படங்களுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
- ★ படங்கள் டிராயிங் பேப்பரில் ஒரே பக்கத்தில் வரையப்பட்டிருக்கவேண்டும்.
- ★ படங்களுக்கு உங்களுக்குப் பிடித்தமான, பொருத்தமான தலைப்பை நீங்களே கொடுக்கவேண்டும்.
- ★ வர்ணப் படங்கள் அனுப்புபவர்கள் வாட்டர் கலர் பெயிண்டைத்தான் கொடுக்கலாம். வேறு வகை வர்ணங்கள் உபயோகப்படுத்தலாகாது.
- ★ ஒருவர் மூன்று படங்கள் வரையில் அனுப்பலாம்.
- ★ ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் படங்களை எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

இவ்வளவுதான் நிபந்தனைகள். பரிசுக்குரிய படங்களை, கலைமகள் - கண்ணன் ஓவியக் குழுவினர் பரிசிலனை செய்வார்கள். இந்தப் போட்டி சம்பந்தப்பட்ட மட்டில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. படங்களுக்குப் பின்புறத்திலோ அடியிலோ உங்கள் வயசு, பெற்றோர், விலாசம் முதலியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். தேர்ந்தெடுக்கப் படாத படங்களைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலை வைத்திருக்கவேண்டும்.

மொத்தம் வயதுவாரியாக ஆறு பரிசுகள் உண்டு. மற்றவை பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். அதற்கும் உரிய சம்மானம் உண்டு.

கண்ணன் சித்திரப்போட்டி முடிவு ஜூலை முதல் தேதியிட்ட இதழில் வெளியாகும்.

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4